23

23

உ

குருவே துணை.

# பக்திவிசேடத்திரட்டு

சிரவணபுரம்

ஸ்ரீமத்-கந்தசாமி சுவாமிகளால்

திரட்டப்பட்டது.

பிரம்மஸ்ரீ

வை. சுந்தரமய்யரவர்களால்

தமது

சென்னை கேசரி அச்சுக்கூடத்திற் பதிக்கப்பட்டது.

1931

ரிஜிஸ்டர்] [விலை அணு 6.

உ

குருவேதுணை.

# பக்திவிசேடத்திரட்டு

இஃது

கோயமுத்தூருக்கடுத்த சிரவணபுரம்

கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ - இராமானந்த சுவாமிகளது

உத்தரவின்படி

ஷ சுவாமிகளின் மாணவர்

ஸ்ரீமத் - கந்தசாமிசுவாமிகளால்

திரட்டப்பட்டது.

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ஜாற்பத்தி ௵ துலாரவி

T12991

R003L07

உ

குருவே துணை.

# முகவுரை

## கலிவிருத்தம்

விளங்கு பத்தி விசேடத் திரட்டினை
யுளங்க னிந்துகற் றுட்பொருள் கொள்பவர்
சளங்க ளியாவுந் தணந்தருள் பெற்றிருட்
களங்க மற்ற கதியுட் கலப்பரே.

## வசனம்.

"பக்திவிசேடத்திரட்டு" என்னும் பெயரானது பக்தியினது பெருமைகளை விளக்குதற்குரிய கவிகளைத் திரட்டி யமைக்கப்பட்ட தொகுதியென்னும் பொருளைத் தந்து அதனையுடைய இப்புத்தகத்துக்குக் காரணக்குறியாயிற்று.

பக்தியென்பது தூலமா யுலகத்தில் வழங்கப்படும் சடபதார்த்தங்களி லொன்றன்று. சூக்குமமாய் ஆன்மாக்களின் இருதயத்தில், பூர்வபுண்ணியத் தொடர்புக்கேற்பத் தோன்றி, நாளடைவில் வளர்ந்து சித்தியென்னும் காய்களையும், முத்தியென்னும் கனியையும், வழங்குதற்குரிய மலரினையொத்த தென்னலாம்.

அத்தகைய பக்தியானது தெய்வத்திருவருட்சார்பினால் பரிணமித்துப் பின் சிவபோதமான புன்மயநீக்கித் தன்மயமாக்கி ஆன்மாவைப் பதியோடு, ஒன்றுபடுத்துந்

தன்மையதாகும். "அவனருளாலே யவன்றாள்வணங்கி" என்றும் "பத்தியாய் நினைந்து பரவுவார்தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யுஞ் சித்தனே" என்றும், கூறப்பட்டுள்ள மணிவாசகமே, அந்தப்பக்தியானது அருளினது காரிய காரணங்களாயுள்ளதென்பதை யுணர்த்தும் தீபம் போல்வதாம்.

அவன்றாள் வணங்குதற்குரிய சாதனக்கருவியான பக்தியானது அவனருளால் உண்டாவதென்னில் அனைவருக்கும் பத்தியில்லாதிருப்பதேனென்றெழும் ஆசங்கை, "இறைவனுற் பொதுக்கருணைகொண்டளிக்கப்பட்ட பகுத்தறிவினுல் விதிவிலக்கறிந்து நடத்தலினின்று இருதய சுத்தியும், அதினின்று தெய்வபக்தி அடியார்பக்தி குருபக்திகளும், அதினின்று சித்திமுத்திகளும் கிடைப்பன. அந்நடைப்பயிற்சி யில்லாதார் வீணுவர்" என்னும் விடையினுல் நீங்கலாம். அஃது எதனை யொக்குமென்னில், சூரியவொளியானது பொதுவகையில் எல்லாப் பொருள் மீதும் படுவதாயினும், பொன் வெள்ளி வெண்கலம் இரத்தினம் பளிங்கு முதலிய சுத்தப் பொருள்களில் அதிகமாகச்சொலித்துப் பிரதிவிம்பித்தல்போலுமென்க. எனவே, சீவமுயற்சியும், தெய்வத்துணையும் கொண்டே பக்தியென்னும் மலர் உண்டாதல் உண்மையென்பது பெறப்பட்டது.

முதற்படியாகிய கன்மத்துக்கும், மூன்றும்படியாகிய ஞானத்திற்கும், இடையில் அமைந்து விளங்குவது பக்தி.

பக்தியின் றொடர்பில்லாத கன்மம் வியர்த்தமாயொழியும். அஃதில்லாத ஞானமும் போலியாய்ப் பேச்

சளவாயொழியும். ஆதலால் தான் "பத்தியினின்று பணிகின்றபண்பினிற்-சித்தியுந்தோன்றுமென் றுந்தீபற-திரும்பாமற் செய்யுமென் றுந்தீபற" என்று பக்தியானது சிறப்பித்தோதப் பெற்றது. மானிடப் பிறவி பெற்றுள்ள வொவ்வொருவருக்கும் பக்தி, இன்றியமையாத் துணைக் கருவியென்ப தொருதலை. முன்காலங்களில் பட்சி, மிருகங்கள், எறும்பு, சிலந்தி அணில், முதலிய செந்துக்களும் பக்தியினால் மேன்மையடைந்த கதைகள் நூல்களிற் காண்கிறோம். அவ்வகையுயர்ச்சி வாய்ந்த பக்தியானது மனித வர்க்கத்தாரிடத்தில் மிகுந்து பயன்றரு நிமித்தமே பல மேலோர்கள் அநேக நூல்களை யியற்றி யுலகுக் குதவியுள்ளார்கள். தற்போது சுருதியுத்தி யநுபவங்களைக் கொண்டு தம்மை யடைந்தார்க்குபதேசித்தும் வருகின்றனர். சென்ற நான்கு ஆண்டுகளுக்கு முன் கோயமுத்தூருக் கடுத்தசிரவணபுரம் கௌமாரமடாலயத்தின் தாபககர்த்தரும், பரம யோகாநுபவ சித்தரும், சண்மத சமயாதீத சமரசஞானியும், பரஜீவகாருண்யப் பிடிப்பினரும், குருபரத்துவ நிச்சய விவேக கௌமார சிரேட்டரும் ஆகிய ஸ்ரீ ல ஸ்ரீ இராமானந்தசுவாமிகள், தமது மாணவரான ஸ்ரீகந்தசாமிசுவாமிகளைக் கொண்டு முன்னூலாதாரத்துடன், பக்தமான்மியம், என்ற பெயராலொரு பெருங்காவிய மியற்றி வெளியிடுவித்தனர். அக்காவியமானது எஙஎக, திருவிருத்தங்களாலமைந்துவிரிந்த பொருளினதாகி, கoசூ, பிரிவுபட்டிருத்தலால், அதனுள், பக்தி முக்கியமானதென்று விசேடித் தோதப்பட்ட கவிகளைப் பொறுக்கி, (கஎஎ) கவிகளும் அவற்றின்முன், தமது குருநாதராகிய மஹான் வண்ணச்சரபம், திருப்புகழ்ச் சுவாமிகளென்றும்

முருகதாச சுவாமிஎென்றும் வழங்கப்பெறும், ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளா லியற்றப்பட்ட நூல்களாகிய, கௌமார முறைமை, சிறப்பு நூல், திருவெண்பா, சத்திய சூத்திரம், புலவர்புராணம், என்பவற்றிலிருந்து பொறுக்கி மொத்தம், (கசo), கவிகளும், உலகிலுள்ள வுத்தமர்களுக் குதவும்படி திரட்டி வெளியிடுமாறு செய்த வுத்தரவை மேற்கொண்டு திரட்டப்பட்டது.

கண்ணிற் பார்வையிருந்து பிணியுண்டோனுக்குக் கண்ணாடி பயன்படுவதன்றிப் பிறவிக்குருடனுக் குதவா ததுபோல், பூர்வதவத்தொடர் புடையோர்க்கு, ஊக்கம் விளைக்க நூல்களமைந்ததன்றி எல்லாம் பொய்யென்றும், வீணென்றும் பேசியிறுமாந்து திரியும், நாத்திகர், தார்க் கர், முதலியோர்க்குப் பயன்படாதென்பது தெரிந்தே இது திரட்டப்பட்ட தென்பதுண்மை. பூமி முழுவதும் பரவிய இருள் சூரியவுதய மாத்திரத்திலொழிதல்போல், ஒருவனது பக்திபலித்து அருட்பேறு பெற்றுக்கொண் டால், அனைவரும் குதர்க்கம் நீங்கி அவன் வழிச்சென்று பயனடைவார்கள். அவ்வித அருட்பேறு சித்திப்பதன் முன்பு அவர்கள் செய்யுமுயற்சி பக்குவிகளுக்குச் சாதன மாயிருந்துதவு மென்ற கருத்தால் விவேகிகள் இதனை யேற்றுறருள்வாராக.

பக்தமான்மியத்தின் குறிப்புக்கவிகள் பக்தியைப் பிரதானமாகக் கூறுமிடத்து விட்டுணுபரந் தோன்றக் கூறுதல்பற்றிச் சமய நூலெண்றெண்ணுதல் கூடாது, "பல் கோடியாகப் பகுக்கின்ற பத்தர்முன்-சொல்கோடி நாம மென் றுந்தீபற- தோய்வதோர் தெய்வமென் றுந்தீபற"

என்ற மேலோர் வாக்கின்படி தெய்வத்தைத் தியான செபதோத்திரங்களாலும்,அபிஷேக அர்ச்சனாதிகளாலும் வழிபடல் வேண்டுமென்னுஞ் சிறப்புப் பொருளன்றிச் சமயபேதச் சார்பான பொதுப்பொருள் சிறிதுமின் றென்ப தூண்மை.

வெண்பா

தண்டபா ணிப்பேர் தவராமா னந்தப்பேர்
கொண்டகவு மாரக் குருவிருவர்—விண்டலத்திற்
சூரியனுஞ் சந்திரனுந் தோன்றியிரு ணீக்குதல்போற்
காரியங்கள் செய்வர் கலந்து.

இங்ஙனம்

பிரசோற்பத்தி ௵
துலா ரவி
சிரவணபுரம்

**தி. செ. முருகதாசப்பிள்ளை**
கௌமாரமடாலயம்,
திருவாமாத்தூர்.

**குருபாதமே கதி**



ஸ்ரீலஸ்ரீ - இராமானந்த சுவாமிகள்

உ

குருவே துணை.

# பதிப்புப்பாயிரம்.

---

திருவாமாத்தூர்க் கௌமாரமடாலயம்

## தி. மு. செந்திநாயகம் பிள்ளையவர்களியற்றியது.

அறுசீர் விருத்தங்கள்.

அரியதெனப்பலநூலும் புகன்றிடுமானிடப்பிறவி யடைந்தசீவ, ருருரியபயனுனசித்தி முத்தியெய்தத்தரு தல்பத்தி யொன்றேயஃதிற், பெரியதுவேறின்றெனுமெய் யுலகுணரச்செயவிழைந்த பிரியத்தாலே, துரியநிலேத்தவ வளஞ்சேர் சிரவையிராமானந்தத் தூயவேந்தல். (க)

தன்னதுதேசிகனுகத் தழைத்தவண்ணச்சரபனெனுந் தண்டபாணி, சொன்னதமிழ் நூல்களெந்திற் பத்தியுபாச னைப்பலிதந் துலங்கக்கூறு, நன்னயச்சொற்கவி நூற்று நாற்பதுமுப்பாகமென நவிலச்சேர்த்துப், பின்னருள்சேர் தனதடிமைக் கந்தசாமிப்புனிதன் பிழைத்தீரன்பால். (உ)

உரைத்தபத்தமான்மியகா வியத்தினிடைபாகவத ருயர்ச்சிகூறி, விரைத்துள்வத்தொடையுடையோன் றிரு வருட்காம்பத்தியினை வியந்தபண்பாற், றரைத்தலத்தோர் களித்திடும்பா நூற்றெழுபத்தேழ்திரட்டிச் சாரம்பொங்க, நிரைத்தவிரண்டாம்பாக மெனவமைக்கவன்னவன்பா ணிகழ்த்தினுனல். (ங)

இத்தகுதிபெறத்திரட்டும் பாகமிரண்டின்கவிக ளிவை ந்தமுந் நூற், றுத்தசத்தேழாயொளிரப் பத்திவிசேடத் திரட்டென் றொருபேரிட்டான். சத்தவலைக்கடல்புடைசூழ் தரணியுளோர்முழுதுமிதைத் தரித்தீடேறச், சித்தமினை ந் தமையுணர்ந்தப் பணிதனக்குத்தருமாறு சிறப்பில் வேண்டி. (ச)

அநுமதிபெற்றுயர்தரமா மச்சதனிற்புத்தகங்க ளனந் தமாக்கி, மநுமுதலோர்சொலுமிருதி வகையிதற்கொவ்வா வெனவே வல்லோரோதத், தினுமமுதச்சுவையறிந்த தேவ ருமீதருமையெனச் செப்பத்தந்தான், பனுவலுணர்புல வர்புகழ்க் காவியமாதியவிரும்பிப் பதித்தமேலோன். (ரு)

தண்டபாணிக்குரவன் றனதுதிருச்சமாதியுறுந் தளி யின்பான்முன், மண்டபமாதியபணிக ளியற்றிமலர்நந்தன மும் வகுத்துத்தன்பேர், விண்டலிலாதுரியகுரு பரன் றிருப்பேர்வரைந்துசிலை விளங்கத்தாபித், தெண்டகு மெய்த்தயைபொறுமை பத்திமுதற்குணங்களமைந் தில குந்தூயோன். (சு)

முதற்குலமாமறையவர்தங் குலத்துதித்தோன்கவு மார முறைகைக்கொண்டே, விதப்படுபன்மதப்பிணக்கின் மயங்காநற்றெளிவுளத்தின் மேவுநல்லோன், சுதர்க்கு மனைசுற்றம்விருந் தினர்க்குமகிழ்சிறப்பவளந் தோய்செல் வத்தின், மிதப்படையாவறிவுடையோன் சுந்தரப்பேரின னெனக்கு மிகநட்போனே. (எ)

## குருபாதமேகதி.

உ

குருவே துணை

# பக்திவிசேடத்திரட்டு

## முதற் பாகம்

## கௌமார முறைமை

### பக்திகாண்டம்

கவி—க.

பத்தியென்கை தெளிந்தவுபா சனையேயாகும்
　　பாருலகி லுள்ளபல தீர்த்தமாட
றுத்தியஞ்சேர் கோயிலெங்கும் வணங்கியேன்ற
　　தொண்டுசெய்த லாதியவாச் சொல்வார்சில்லோர்
சித்திநல்க மாட்டாது சமயவாதந்
　　தீர்ந்துகளி கூரும்வண்ணந் தெளிவியாது
முத்தியெவ்வா றுதவுமவை கருமமேயால்
　　முன்னுரைத்த காண்டமதின் முறையாமன்றே. (க)

ஷை—உ.

ஆலயத்தா லெந்திரத்தாற் கும்பந்தன்னு
　　லாராதிக் கின்றவரு மகத்தினூடோர்
கோலமமைத் திருப்பாரே யாகிலன்னோர்
　　குறித்தபயன் சீக்கிரங்கை கூடுமிந்த

ஞாலமதைப் பார்க்கவந்த கண்ணேகண்ணு
    நாடில்வெகு நாட்கழியு நலமாகாது
சாலவுருத் தியானமொடு பாடுபட்டாற்
    சாக்கிரத்துந் தோன்றுமிது சரதந்தானே. (உ)

ஷை—எ, உரு, எகூ.

அநுபூதி யுடையார்தந் நூல்களாராய்ந்
    தநுட்டிப்போ ருபாசனையே யருமையென்பா
ருனு நூலோர் கலையிலிருந் ததனை மற்றோ
    ணெருகலையின் மொழிபெயர்க்க வொருவன்பாடப்
பினுமோர்மா னிடனுரையாற் பொருள்சற்றோர்ந்து
    பிதற்றுவோர்க் கதன்மகிமை பிறங்குங்கொல்லோ
தனுவாதி யவைதருவா னுண்டென்றெண்ணிச்
    சார்தருமெய்ப் பத்திநிலை தவறேண்ணுதே. (ங)

பத்திநெறி யேயுயர்வென் றுணராமாந்தர்
    பதரனையா ரவர்பலரும் பழையகன்மம்
புத்தியினின் றூட்டுமெனப் புகல்வாரந்தோ
    புகலிநகர்க் கவுணியன்றன் புதல்வனந்நா
ளத்தியைப்பெண் ணுருவாகச் செய்தான்மற்றோ
    ரருந்தவன்கன் மிதந்திடச்செய் தமண்போர்வென்று
னித்திறல்போன் றுள்ளனவும் வினையாங்கொல்லோ
    விலங்குதிரு வருள்வலியென் றியம்பலாமே. (ச)

மந்திரமட் டுரைப்போரிற் சிலைசெம்பாதி
    வடிவமினைப் போருயர்ந்தோர் மற்றன்னோரிற்
புந்தியினு லுருவமைப்போர் மேலாவாரப்
    புலவரினுங் குருவையெண்ணும் புனிதர்மிக்கோர்

தந்திரரிந் நால்வரினுஞ் சிறந்தோர்நாளுஞ்
சலியாமற் சாதிக்குந் தவத்தின்மாண்பா
லிந்திரவி யுள்ளமட்டு மழியாக்கீர்த்தி
யெய்தினோ ரெனத்துணிவுற் றியம்பலாமே. (ரு)

ஷை—அ௦, அக, அஉ.

ஒருமூர்த்தி வடிவைநினைந் துபாசிக்கின்றோர்க்
கொவ்வாத மனமுடையோ ருறவாகாது
பொருள்வாதை யென்கைகன வினுமாகாது
புலையினொடு கொலையுமன்ன பொய்யுமாகா
துருமேறொத் தார்ப்பரிக்குங் கோபமாகா
தூர்கடொறும் போய்ப்பலவா றுழலலாகா
தருமாந்த மங்கையர்கற் பழிக்கநாடு
மதிமோக மாகாதென் றறைவாரன்றே. (சு)

உருவேறத் திருவேறு மென்னுமாற்ற
முலகிலுள்ளார் களுமுரைப்ப துண்டென்றாலுங்
கருவாதை நீங்கியுய்கைக் கானஞானக்
கண்விளங்கப் பெற்றோரே கருதுவார்க
ளொருபீசாக் கரத்துக்கோ ரிலக்கமென்ன
வோதுவார் பலரொவொன்றிற் கொவ்வோர்கோடி
மருளாமற் செபித்தேனுஞ் சித்திசெய்ய
வல்லானே யறிவறிந்த மகனுவானே. (எ)

செபமொன்றே குறியாமென் றெண்ணிக்கொண்டு
சிந்தையடங் கிடுநிலையைச் சிந்தியாமல்
விபரங்க ளியாதொன்றுந் தோன்றாவண்ணம்
வெகுவிரைவாச் சொல்லிடினும் வீண்போகாது

சபதங்கள் பேசிநன்றுச் சித்தியாமுன்
றலைகொழுத்து வித்தையெண்ணித்தவிக்கொண்ணாது
கபமிஞ்சு மரணமுண்டென் றஞ்சிவேண்டுங்
கடவுளைச்சாக் கிரவெளியிற் காண்கைநன்றே. (அ)

ஷை—அஅ.

நல்லவுபா சனையெனினு மெளியதல்ல
நனவிலெனக் கனவினிலு நாட்டம்வேண்டுஞ்
சொல்லளவிற் களிக்குமைய லொழிக்கவேண்டுந்
தொல்லுலகி னிலையுணருஞ் சூழ்ச்சிவேண்டும்
வல்லபர மித்தகைத்தென் றறியவேண்டு
மகத்தான பெரியோரை வணங்கல்வேண்டும்
வில்லனைய நுதலாரை வெறுக்கவேண்டும்
வேற்றுயிர்கொல் லாவிரதம் வேண்டுமன்றே. (சு)

---

## சிறப்பு நூல்

### பக்தி யுருவகம்.

பத்தியிலாப் பாவிகளைப் பல்சமயப் பக்குவருஞ்
சத்தியத்தைத் தேறுந் தவத்தோரும்—புத்தியுள்ள
நல்லாரு மிக்குணர்ந்த நாவலரு மேசலன்றிக்
கல்லாரு மேசக் கடன். (கo)

எத்திறமை யில்லா ரெனினு மிறையிடத்துப்
பத்திகொண்டோ ராயிற் பழுதுறூர்—சித்தியெட்டுஞ்
செய்து களித்துத் திரும்பாத வீட்டினும்போ
யெய்துவரென் றோதுமுல கே. (கக)

உள்ளத்திற் றோன்றி யுலகனைத்து முண்டுவளர்
வெள்ளக் கடலனைய மெய்ப்பத்தி—யெள்ளப்
படுவதே போன்றிருந்து பற்றிலார் தம்மைச்
சுடுவதே யென்கைமுன்னோர் சொல். (கஉ)

சமையத் திருந்தொருவன் றன்னைப் பிடித்தாற்
சிமைய மெனவளர்ந்து தெய்வத்—தமைவுணர்த்திச்
சித்திதந்து முத்தியினுஞ் சேர்க்குந் திறத்தினது
பத்தியென்றே சொல்லும் படி. (கஙு)

தாம நறுங்குழலார் தங்களுக்குங் காமுகர்க்கும்
பாமரர்க்கு நன்குணர்ந்த பண்டிதர்க்குஞ்—சேமநல்கும்
பத்திகொண்டு நிற்கினல்லாற் பண்டைத் தலைவனுண்மைத்
துத்தியந்தந் தாளான்மெய்ச் சொல். (கச)

கந்தமலரிற் கலந்தாங்கு நின்றானைத்
தந்தங் குருவடிவாத் தாங்கண்டோர்க்—கெந்தநல
மெய்தாது பத்தியொன்று மில்லையென்று லியாதுமில்லை
வைதாலு நல்கு வரம். (கரு)

வாக்காதி மூன்றால் வழிபடுவோர் வஞ்சமறத்
தாக்காண்மை கொண்ட தனியருட்கோ—னீக்கானென்
றெண்ணித் துணிந்து மிடையுமனத் தேழையன்ப
ருண்ணிற்கும் பத்தி யுயர்வு. (ககூ)

அண்ண லொருவனே யாருயிர்க்கு நேயனென
நண்ணவல்லார் பத்தி நலமன்றே—யுண்ண
லுறங்கன்முத லாந்தொழிலு முள்ளனவுந் தான்வந்
திறங்கலிட்டுக் கொள்ளுமவ னே. (கள)

வழுவா நெறியெனுங்கை வன்பர்க்கும் பத்தி
நழுவாக் கருணையங்கை நாடித்—தொழுவார்க்குங்
கொண்டகுரு வாணையவன் கோலமிலா னுள்ளானென்
றுண்டகைய நெஞ்சமுண ரும். (கஅ)

அன்னோ னருள்பெற் றளிகூர்ந் தடற்புகழுஞ்
சொன்னோ ரனைவர்க்குந் தொண்டனு—நன்னேன்பு
நோற்கின்ற பத்திசெய்யு நுண்ணியரே யெண்ணிமகிழ்ந்
தேற்கின்ற பேறுமொன் றுண் டே. (ககூ)

## திருவெண்பா

### சித்தாந்தப்பத்தி.

எல்லவர்க்குங் கோவா மிறைவ னொருவனே
வல்லவனு மியாவுமுணர் வத்துவாஞ்—சொல்லரிய
பேதாதி பேதமெல்லாம் பெற்றதுவா மென்றுரைத்தற்
காதாரக் கேட்கை கடன். (உ0)

வானம் பெயலு மதியிரவி தோன்றுதலுந்
தானந் தருமந் தழைப்பதுவு—மோனநிலை
யுண்டென்று பன்னூ லுரைப்பதுவு முன்னுநர்க்கே
தொண்டென்கை நல்ல தொழில். (உக)

கருப்பத் திருந்துமுற்றிக் கான்முளையாத் தோன்றிப்
பருப்பதநேர் கொங்கைப் பயமுண்—டிருப்பவரைக்
கண்டுந்தா மந்நாட் கழித்ததறி யாதிருந்தும்
பண்டுடையே மென்பார் பலர். (உஉ)

பத்தி நிலையிற் பதியாத பாமரர்க்குச்
சித்தியொடு முத்தி சிறிதுமில்லை—கத்திகொண்டு
வெட்ட வரினுமொரு மெய்ப்பொருளுண் டென்பவருக்
கிட்டமுற்று மெய்துவதுண் டே. (உரு)

சாகப் பயந்து தடுமாறுந் தன்மைக்கு
மோகக் களைகளையு முன்னவற்குத்—தேகமுதன்
மூன்றுங் கொடுக்கு முரணூர்ந்த பத்திக்குந்
தோன்றுமல கில்லாத் தொலை. (உச)

தெய்வ முலகைத் தெரியாத பாழென்று
ளுய்வதென்றொன் றில்லை யுயர்வில்லை—செய்வதனுட்
புண்ணியபா வங்களில்லை போர்வேந்தும் பொன்னுமெய்யென்
றெண்ணியவர் தம்மையெள்ளோ மே. (உரு)

முத்தி யடைந்த முனிவோர் பலருக்கும்
பத்தி துணையான பண்புணர்ந்து—சித்தி
வழியாகச் சேரவெண்ணி வாடாத் துறவோர்க்
கழியாகக் கொண்டதுல கம். (உசு)

ஆலயத்தி லன்புசெய்தா லவ்வச் சமயத்துச்
சீலமிகு தெய்வத்தின் றேட்டமுண்டாஞ்—சால
வருந்தி யுழைத்தான் மனம்போல் வடிவம்
பொருந்திவரு மொன்றிலன்பு போம். (உஎ)

அருவுருவென் றோது மகண்டகண்ட மாகு
மொருவனே யெச்சமயத் தோர்க்கும்—பருவமறிந்
தின்பங் கொடுப்பா னெனவுணரா ரேய்ந்தபத்தி
துன்பந் தருவதுண்மைச் சொல். (உஅ)

கொன்று புலவருந்தாக் கூர்ப்புடைய பத்தரவை
துன்றுநரை யெள்வரவர் சொந்தமென—நின்று
விளையாடுந் தெய்வமொன்று வேறுளதென் றெள்ளார்
களையா மவரிகழ்வார் கள். (உகூ)

---

## சத்தியசூத்திரம்

---

### உபாசனை.

தெய்வ நாட்டஞ் சிறிது மில்லா
மானிடர் யாவரு மரையனை யாரே. (௩0)

உருவமு மருவமு மொன்றுந் தெய்வத்
தன்மை யாயினுந் தனிமனக் கண்கொண்
டுருவா நாடுத லுத்தம மன்றே. (௩க)

தெய்வநிந் தனையே திருக்கிளர் தவமா
மெழுத்தை நாடலியம்பன்மட் டாதல்
காற்றொடு முரண லாதிய கடையே. (௩உ)

பலவற் றொன்றெனப் பழகப் பழக
யாவுந் தானு வியங்கு மன்றே. (௩௩)

எங்கே வுங்கே வெனவிகல் கின்று
ரிளம்பக் குவத்தோ ரென்பது துணிவே. (௩ச)

தானொரு மூர்த்தி யாந்தகை வரினும்
பற்றிய வுருவப் பாவனை விடானுக்
கண்டு தேறுங் களிப்புறு தவனே
சித்திமுத் திகளின் சீர்பெறு வானே. (௩ரு)

வங்கந் தனையிகழ் மடமலி வாதியும்
விடங்கொடி தென்றிகழ் வெங்கட் பணியுஞ்
சித்திவம் பென்றிகழ் சிறுமதித் தவனு
மொன்றுெடொன் றுறழ்தற் குரிய பொருளே. (௩௬)

கடன்மலை முதலாக் காண்டகு முலகைச்
சிட்டிசெய் ததுமோர் சித்தி யாமே. (௩௭)

தெய்வங் கண்ணெதிர் திகழா தென்னும்
புன்மைத் தவத்தோர் புராணம் பலவற்
றெண்ணில்பற் பலர்கண் டிட்ட தாகச்
சொல்லன்முற் றிகழ்ந்த தோட மெய்திக்
கீழ்மைய ராகிக் கெடுவா ரன்றே (௩௮)

கோசிகன் முதலோர்க் குறியாத் தவத்தோர்
பாவ மலிவாற் பலிநுகர் வோரே. (௩௯)

---

## புலவர்புராணம்

---

### திருவாதவூரர் சருக்கம், ௩௦, ௪௦.

தீர்த்தனுக் காலயஞ்செய் திருப்பெருந் துறையின் வாழ்விற், சீர்த்ததம் முனிவற்கந்தச் சிறைத்தனிக் கூட மென்கை, தூர்த்தமா னிடரோரார்கள் சுருதிசொ னிலையினின்றோர், மூர்த்தமே குறியாப்பற்றி முயல்பவ ருணர்தற்பாற்றே. (௪௦)

தெய்வமேதுணையென் றுணர்ந்தொருமூர்த்தித் தியானமுஞ்செபமுநன்கியற்றி, யுய்வதுகுறிக்கு முறுதிபெற் றுள்ளீ ரும்மதுகனவினிற்பொறிக, ளைவகையொடுங்கு

நிட்டையிற்ரேற்று மவைகளாலாண்மையெய்திடன்மின், சைவநாயகனைக் கண்டருள்பெற்ரேன் றயங்குமாறுணர்ந் தடங்குமினே. (சக)

ஷை—சூஎ.

கைத்துரிதங் கண்டுமிவர் கண்ணுதலென் றுணரரா
யத்துவித சித்தாந்தத் தவருமருண் டனராளுற்
பித்துடையா ரனையபிறர் பிரானெதிர்வந் துற்ருலுஞ்
சித்துமிகச் செய்தாலுந் திருடனென்கை முறைதானே. ()

திருஞானசம்பந்தர் சருக்கம், சஅ, சகூ.

ஆதலான்மதக் குறும்பினர்தம்மை யடக்கல்வேட்டுளீ ரருந்தவஞ்செய்து, நாதன்மெய்யருள் பெற்றபினடர்மி னன்றுதீதென நவின்றுநாய்ச்சமர்போல், வாதமிட்டுழன் றரசனுணையினுன் மாழ்குமேறன்மின்மெய் வத்துவுண்டென ற்கு, மேதமோருயிர்க் கியற்றெணுதெனற்கு மிசைபவா மத மியாவுநல்லனவே. (சரு)

அலரியேமுதற் றிகழ்பலபொருளா லகிலஞ்செய்த ளித் தழிக்குமோரமலன், குலவுதன்னருள் பெற்றவரள விற் கூடிக்கொள்பவ னென்பதுகுறித்தே, வலவர்வாத துர்ப்பலமலாற்சிறிது மதத்தின்றுர்ப்பல மின்றெனவகுத்தார், புலமையென்றசொற் பொருளுமோர்கில்லாப் புல்லர்சொல்வழி போமவர்பலரே. (சசு)

திருமங்கையாழ்வார் சருக்கம், ௨சு, ௨எ, ௨கூ.

சிவனையிழிதேவதையாச் செப்புசிறுவயிணவருஞ் செங்கட்கார்போல், பவனையொருபசுவென்றே பகருமிளஞ் சைவர்களும் பழுதில்காழித், தவரிருவர்களுமுறவாய்

நிகழ்ந்தனரென்றூற்சகியார் சண்டையிட்டுக், கவலைமிக வொருவனைமற் றொருவன்வென்று னெனப்பகர்ந்து களிப் பாரன்றே. (சரு)

சதுர்வேதசித்தாந்தந் தனிற்குலவுசட்சமயத் தலைவர் தம்மு, ளிதுகாறுமொருவரைமற் றொருவர்பொருதழித்த கதை யில்லையில்லை, பொதுவாயபரஞான முதியாமுனிளம் பருவப் புதல்வர்போல்வா, ரதுகேழென்றிதுமேலென் றறிந் தளவிற்புகன்றுசின்னு ளயர்வதுண்டே. (சசு)

என்றெய்வம்பெரிதென்போன் கன்னியொப்பான் றெய்வமொன்றே யெனத்தேர்ந்துள்ளோன், குன்றென்ன முலைபெருத்துக் கொண்கனுக்காம்பருவமுறுங் குமரி போல்வா, னன்றென்னலழிந்திடவு மாமெனவுண்டாக வுஞ்செ யருள்வாய்ந்துள்ளோ, னென்றென்ன வுலகுபுகழ் மதலைபயந்துளவனிதை யொப்பானன்றே. (சஎ)

ஷை நுக.

நான்முகனுமகத்தியனே முதலாயமுனிவரரு நகுவெ ண்டிங்கள், போன்முகங்காட்டிடுமௌவை வள்ளுவனதி யராஞ்சில் புலவர்தாமு, நூன்முகத்துந்தெய்வமொன்றே யெனநுவன்றூரொருசமய நோக்கத்தின்னோர், மேன்முகப் பேறடைந்துமுதற் பிடித்தபிடிகடைப்பிடியா விளம்பி னூரே. (சஅ)

ஷை நுஎ - நுஅ.

எத்தனையோநாரணர்மான் மழுவணிந்தான்றனைத் தொழலு மெழிற்சங்காழி, வைத்தகரத்தானையுமவ் வாறு பலவுருத்திரர்கள் வணங்குமாறுஞ், சித்தமறிதரக்குரவன்

றிருவடிசான்ருக்கொவ்வுந் தெருட்சிவாய்ந்த, வித்தகரே நான்முகனை வியாசன்முதலினரைநிகர் விரகுள்ளோரே. ()

வெண்ணீறிட்டார்பலருஞ் சிவனென்றுந்திருமண்ட்டு விளங்குவோராம், வண்ணீர்மையோர்பலரு மாலென்றும் பெரியோர்சொல் வகைநன்கோரார், புண்ணீடுமனத் தினராப் புலர்வதன்றியின்பமொரு போதுமெய்தார், தண்ணீருநெருப்புமவர் தங்கிடமென்றுணர்ந்தரிய தவஞ் செய்யாரே. (ருo)

## சுந்தரமூர்த்தி சருக்கம், உக.

காமவேள்கணையின் கதுமைசற்றேனுங் கதுவுருக் கவுணியமதலை, யாமவனருட்பே றடைந்ததுவியப்போ வணங்கனிருவர்தோளணைந்து, நேமமுந்தவறி யதன் பொருட்டிரண்டுநேத்திரங்களுமிழந்தடைந்தோன், சோம சேகரனை யவர்கள்பாலிதச்சொற் சொலும்படிவிடல் பெருவியப்பே. (ருக)

## சேரமான் சருக்கம், கரு.

இவ்வுல கத்தினி லெடுத்த யாக்கையு
மவ்வுல கத்தின ரறிவுந் தோய்ந்தருட்
செவ்வுரு வத்தரன் சிலம்பில் வாழ்கதி
யொவ்வுத லின்றிய வுயர்ச்சி யுற்றதே. (ருஉ)

## ஔவையார் சருக்கம், ஙகூ, சo.

முந்தவருள்பெற்றசில பெரும்புலவர் தங்கருத்தின் முன்னல்செய்வான், றந்தமதுகடவுளரைத் துதித்ததுவு மௌவையொரு தாலத்துண்டு, கந்தமலிதருகனியீந் திடற்

கதையே கேட்டதிவுங் கருத்தாண்டி, யிந்தநிலையந்தநிலை
யிரண்டுமதித்தறிதகைமை யெளிதன்றம்மா. (ருங)

அணுத்திரணகாட்டமுதற் றெய்வவடிவாவிளங்கி யத
னுலன்றே, கணுப்பொலிவார்பனந்துண்டைப் பழந்தரு
கென்றெளவையந்நாள் கழறிப்பெற்று, டி-ணுக்கமுறும்
வன்னெஞ்சச் சிறுவருமிப்பெருந்தகைமை தெரிதற்
பாற்றே, நுணுக்கமுறுபேரறிஞ ருணர்வரவர்பலபிறப்பி
னேற்றுள்ளோரே. (ருச)

சிவவாக்கியர் சருக்கம், அ.

கல்விசெல்வ ஞானமென்று கழறநின்ற மூன்றுமுன்
னல்வினைப்ப யன்கொடேய்தன் ஞாயமன்றி ஞாலமேற்
பல்விதப்ப டச்சொன்மேன்மை பற்றியன்று கற்றுளார்
சொல்விதிக்க டங்கிடாது சுத்தமான சோதியே. (ருரு)

ஷ உங, உச, சக.

ஆதலின்மடவார் நலநினைத்திடினு மகத்தினுளரு
வருப்புண்டா, மாதவர்தாமே தனித்துறற்குரியார் வன
முலையாதியகருதிப், போதநோமனத்தா ரவரொடுகலந்தே
புனிதமாதவஞ்செயலாகு, மீதளவறுநூற் சம்மதமெனினு
மில்லறந்தவத்தினுக்கிடரே. (ருசா)

அன்றியோர்சரத மரனரிமுதற்றே வனந்தமுமாகும
தறிய, நின்றிகத்தொளிர்வ தென்னெனின்மடவார் நேயம்
விட்டருந்தவமுயன்று, பொன்றிடாமுத்தி புகுந்தவர்பல
பேர் புகன்றசொற்றவறிடாமனையோ, டொன்றிமாதவஞ்
செய் துய்ந்தவர்சிலபே ருடல்வராக்கதிகுறியெனலே. ()

வெண்ணீறு மிகப்பூசி வேணியரன் றுதிசெய்வான்
மண்ணீடச் சாத்திநெடு மாலையொருக் காற்புகழ்வான்
றண்ணீருந் தீயுமவர் தஞ்சொருப மெனத்தேரார்
கண்ணீர்விட் டழுவிரண்டுங் கலந்தணிந்துங் களிகூர்வான்.

திருவள்ளுவர் சருக்கம், சகூ.

சிறந்தமேலவர் தீவினையொருவரைச் செயும்படி யுரைத்தாலு, மறந்தழைத்ததோர் ஞாயமங்கதனிலுண் டாவதற்கிது சான்றும், பறந்தவோதிமப் புள்ளிறையாதி யர் பகர்ந்தசொற்குறித்தேனு, மிறந்தவூனுமுண் பது தகாதென்பதே யியற்றமிழ்மறைக்கோளே. (ரு௬)

பட்டினத்துப்பிள்ளை சருக்கம், ச௦, ௬ரு, ௬௬.

ஈசனை விடைமேற்கண்டு மெய்திடா ஞானமந்நா
ளாசகல் குரவனுட்ட மமைந்ததோர் கிழிநல்கிற்றூற்
பாசநோய் தவிர்ந்துமுத்திப் பயன்பெற முயல்வார்மட்டிற்
றேசவிர் தெய்வந்தன்னிற் றேசிகன் சிறந்தோன்றனே.

அற்பநெஞ்சுடைத் தவசிகள்பேறுசற் றடையுமுன் னிறுமாந்து, தற்பரத்துவம் பெற்றதாக்குதித்தெணில் சட மெடுத்துழல்வார்கள், சிற்பரத்துடன் கலக்கவேபிறந்துள சீரியதவத்தோர்தா, முற்பரன்பல்காற் றிகழ்தரப்பெறினு நன் முயற்சியிற்றளராரே. (௬க)

எத்தகைப்பெரு வல்லபமுடையவ ரியாவரேயானுலு
மத்தனுரரு ளாட்டியவண்ணமே யாடுவரெனுமுண்மைக்
கித்தனிச்சரித் திரமுதற்சாட்சிக ளின்னமெத்தனையோவாற்
பத்தர்சொற்படி தெய்வமேதுணையெனப் பற்றலிற்பழுதின்றே

## சேந்தநாயனூர் சருக்கம், கசு.

முன்னுளிலிருடியரு மரசருப காரமிக முன்னிவாழ்ந் தார், பின்னுளைத்தவசிகண்மன் னிடஞ்சேவிப் போர்களை யும் பேணக்கண்டே, மன்னுனங்ஙன முரைத்த வாச்சரிய மாரறிவா ரரனேதேர்வான், பொன்னுசையுள்ளமட்டும் புவியிலருட்பேராண்மை பொருந்திடாதே. (சுஙு)

## பத்திரகிரியார் சருக்கம், ௩௦.

கணவனுத் தரவை மாருக் கன்னியிற் கருணைப் பான்மை, யணவுசற் குருசொற் றள்ளா வறிவுடைச் சீடனு னுன், றணவரு முவகை வாய்ந்து சரதசித் திகளுந் தோய்ந்து, பிணமென வீழாவீடும் பெறுமெனல் பிரான் சொல் லாமால். (சுச)

## போய்யாமோழிப்புலவர் சருக்கம், கக.

அருளில்லவர் பொருண்மிக்கடைந் தாலுங்கொடுக் கறியார்
பொருளில்லவ ரருளூற்றிடிற் போதுங்கொடை புரிவார்
தெருளின்பமு ளாரேயிது தெரிவார்பிறர் தேரார்
மருளில்புல வன்றற்கென வைக்காதிடல் வியனே. (சுரு)

## அருணகிரிநாதர் சருக்கம், கச, சுங.

கனவிரண்டி னனவிரண்டிற் கண்டவநு பவமெல்லா
மனதறிந்த களிப்பளித்து மற்றையவர் கண்காண
வனகவிளை யாட்டிசைக்கு மதுகிடையா மையினேங்கித்
தினமும்வெகு வாமுயன்று செழுந்தமிழாற் றுதிசெய்தான்.

ஒன்று மாய்ப்பல பொருளுமாம் பரத்தரு ளூறினுந்
துன்று காருணி யத்தள வேவலிதோயு

மென்று சொல்வதற் கெழிலரு ணைச்சிக ரியின்முன்
னன்று வாதிடு மிருகவிப் புலவர்சான் ருமே. (சாஎ)

## இரட்டைப்புலவர் சருக்கம், ருங.

இன்றுமந்த நதியவ்வா றெழுகுதலும் பெருவெள்ள மெய்துமாகின், முன்றுலங்கும் வழியினும்போய் மாதை நகர்ச்சூழ்தரலு முறையிற்காண்மின், குன்றுறழு மாணவங் கொண் டிகலுமிளம் புலவீர்காள் கோடிகோடி, யென்று பஞ்சாக் கரஞ்செபித்தா யினுமரன்பா லருள்பெறலே யேற்றமாமே. (சாஅ)

## தத்துவராயர் சருக்கம், சா-முதல் கூ-வரை.

சொருபனுகிய குருபரனநுபவந் துகளிறத்துவராய, னிருதயத்தினு ணிகழ்ந்தத்ா லுவகைவா ரிதியின்மூழ்கின ரானர், சருவகாரண மானமனேலயந் தனைக்குறித்தில ராகி, யருமைநூல்வழி யிதற்றும்வாய்ஞானிகட் கத்தனே பாடின்றே. (சாகா)

சீடனுமவன் செந்தமிழ்ப்பெருங்கடற் சீர்முழுதறிந் துற்றும், பாடல்விட்டன னிராப்பகலநுபவப் பழக்கமே செயலானு, னீடறிந்தில ரவனேயத்துவிதியே யென்னினுங் குருபத்திப், பீடணேந்தமை யுணர்ந்தவர் சமரசப் பிடிப்ப னென்றிசைப்பாரே. (எ0)

குரவன்பத்தியிற் சீரியரளவிலார் குவலயத் தவிர்ந் தாலுங், கரவினெஞ்சுடைத் தத்துவராயனேக் கடுப்பவ ரிலர்மெய்யே, பரனுமாயனு மயனுமற்றையவிஞே ரனே வருமவனேயென், றிரமுற்றேனது வேமறைத்துணிவு மாஞ் சிறியவருணராரே. (எக)

அத்தகைப்பெருஞ் சீடனுமவன்முன ளறிந்துவப் படைந்திட்ட, முத்தமிழ்ப்பயன் வீண்படாநிமித்தமே முதி ரருள்வடிவான, வுத்தமக்குரு வவன்றன்மேற்சினஞ்செய வுன்னினனிடங்காணான், சித்தமுற்றொருப் படுமவர்தம் மிசை தீங்கெவர்தெரிவாரே. (எஉ)

ஷை கக, உச-முதல் உஎ-வரை.

எந்தச்சித்தியு மிதயமதனையடக் கிடுதலிற்கடை யென்ன, முந்தச்சிற்சிலர் நூல்சொலுமவ்வழி முயல்பவர் களுமோர்வார், மந்தப்பக்குவ ரறிந்திடார்தத்துவ ராய னவ்வலியோடு, சந்தப்பாவரை தெளிதருபுலமையுந் தலைக் கொடுதிகழ்ந்தானே. (எங)

பத்திவேறுமெஞ் ஞானம்வேறெனப்பகர் படிற்று ரைப்பலமூடர்க், கித்திறத்துயர் தத்துவராயன்ற னியற்பு லமையுமோன, சித்திநல்குசற் குருவிசுவாசமுந் தெளிவு மெய்தரிதேயா, மெத்திறத்தெது மாயையான்பிரமமென் றியம்பன்மிக்கெளிதாமே. (எச)

யான்பரம்பொரு ளென்றுசொல்லினுங்கதி யெய்த ல்ாமெனு நூல்க, டான்பயின்றிலன் போலுமத்தத்துவ ராயனுந்தவசீலன், கான்படர்ந்தகொன் றைத்தொடைச் சிவனிகர் கருணையங்குருமூர்த்தி, வேன்படுஞ்சினஞ் செயல்பொருதலைக்கடல் வீழ்ந்திடச்சென்றானே. (எரு)

சொருபன்போல்பவ னல்லனேயென்னினுந் தொட ர்ந்தொருசொற்சொன்ன, குருவைத்தெய்வமென் றுணர் பவரெண்ணங்கள் குறைவறநிறைவேறு, மருவமேபர மெனத்துணிவார்கட்கு மதுபெருந்துணையேயாம், ப்ருவ

மெய்துமுன் பிஞ்சினிற்பழுத்துப்பாழ் படுமவர்பல ரம்மா. (எசு)

துவிதமத்துவி தமெனப்போராடுநர் தூயமெய்யுணர் வில்லா, ரெவிதத்தாயினுஞ் சித்தியுமுத்தியு மெய்தலேகுறி யாகு, மவிதத்தன்னவன் றன்னையத்துவிதியென் றறை பவர்பலரேனுந், தவிதத்தீர்தரு குருபத்திமிகுதியாற் சமர சியானுனே. (எஎ)

## திருச்சிற்றம்பல நாடிகள் சருக்கம், உஎ.

பஞ்சகிர்த்திய நடம்புரிகின்ற பரமன்மெய்யருட் பயன்கொண்மேலவர்க்குத், தஞ்சமத்துவத் துயிர்களின் கரும சாலந்தீர்தரத் தமிற்கலந்தவன்றன், கஞ்சநாண்ம லர்ப் பதத்தபேதமதாக் கலக்கும்வண்மையுங் கைவரு மாகி, லஞ்சன்வேள்சம ஞுதியர்ச்செயிப்ப தருமையாகு மென் ருர்பகர்வாரே. (எஅ)

## சிவப்பிரகாசசுவாமி சருக்கம், சஉ.

அவனத்துவிதமோதி ஞனென்றுகளிமிக் கடைந்தே பலோர், புவனத்தின்முயல்வார்க ளவனிற்றமிழ்ப்பாடல் புகல்வண்மையுஞ், சிவனைப்பணிந்தன்பு செயுநீருமொன் ஞர்ச் செறுந்தீரமுந், தவசிற்பெறும்பே றெனத்தேறியத ஞடு சாரார்களே. (எகூ)

## சாந்தலிங்கசுவாமிகள் சருக்கம், அ-முதல், கரு-வரை.

கொல்லாமை நாட்டக் குறித்தமுத ஞலிடத்திற்
பொல்லார் களிற்றலையாம் பூருவமீ மாஞ்சனெ்றி
யொல்லாதென் ஞதுசிறி தொப்பினன்போற் செப்பியதால்
வல்லார் சிலர்தா மனத்தாப மெய்தினரே. (அ0)

வேள்விப் பெரும்பகையாம் வீரசைவ சித்தாந்தக்
கோள்விட் டிடாத குருவா மவனூலில்
வாள்விப் பிரர்செய்கொலை மட்டுமொப்ப லேனென்னுங்
கேள்விக் கெதிர்சொற் கிளத்துமா றோர்ந்திலனே. (அக)

வண்டகமஞ் செய்பனவர் வாஞ்சை யிடைமூழ்குந்
தண்டமிழ்த்தே யத்துச் சனங்கள்பல ராதலினால்
விண்டதன்னூன் மாயா விதங்கருதி மீதிலொப்பிக்
கொண்டனனென் றெவ்வொருக்காற் கூறலன்றி வேறிலையே.

யாகக் கொலைநலமென் றெண்ணுகின்றோ னுமொருவன்
போகத் தயக்கமற்றுப் போய்ப்புகுந்தொல் வீட்டினிலுஞ்
சாகக் கொலைசகியாத் தண்ணளியுற் றோனொருவ
னாகத் துடன்வீ ழளறுயர்வென் பாருளரே. (அ௩)

பெற்றதைக்கீ ழாக்கிப் பெறாததனை மேலாக்குங்
குற்ற முயிரின் குணமென்றோர் பாசுரத்திற்
சொற்றனனவ் வாறுபல சொற்களுல கத்தனையும்
விற்றளித்திட் டாலும் விலைமேவா விண்டனனே. (அ௪)

எம்மதத்தி லுள்ளவர்க ளெங்கிட்டை சொன்னாலுஞ்
சம்மதமே யாமெனக்குத் தற்போத மாயிலெனப்
பொய்ம்மதத்தோர் நாணப் புகன்றருளு மப்புனிதன்
மும்மதமாப் போலு முழுஞான வீரனம்மா. (அ௫)

## குமாரதேவர் சருக்கம், ரு, கசு.

வெகுவாயுணர்ந்த குரவோர்களிந்த வியன்மேதினிக் கண் முறையிற், றகுசீடர்தம்மை யனையார்களாய் தரு ணத்தில்வேறோர் நகரிற், புகுமாறுரைக்கை கண்டே

னிதென்ன புதுமைக்குணங்கொ லறியேன், மிகுதொண்ட ரோடு புகலிப்பிரானில் வீட்டுட்செல்வார்கள் சிலரே.(அசு)

கழறுந்தொகைக்கு ளுயர்சுத்தசாத கமெனக்குலாவு மொருநூன், மழமைந்தர்ஞான வழிகட்கொவாது மாயோகசாத னையினிற், கிழமென்றிலங்கு மவரேகொள்வார்கள் கீழ்முத்திநம்பு மவரைத், தழலின்கணுற்ற புழு வென்னவாட்டு தகவுற்றதென்கை நிசமே. (அஎ)

தாயுமானசுவாமி சருக்கம், உ௦-முதல், உரு-வரை.

பாதியுடல்வெந்திட்ட பின்னிட்டைதவறிப் படித்தலே யுணர்ச்சிவந்தித், தீதிழைத்தவன்வங்கி சங்கெடுகவென் றோர்சொற் செப்புபுமறைந்தானெனு, வோதிடுமிவுலகமவ் வரசுதத்துப்புதல்வ ருழிநின்றுபொலிவிழந்த, தாதின்ன வூரென்று ரைப்பாருமுளரென்மன மவ்வளவுமிசைய விலேயே. (அஅ)

நான்கும்பிடும்போ தரைக்கும்பிடாதலா னுன்பூசை செய்தன்முறையோ, வேன்கும்பிடுந்தொண்டு செய்குவே னென்னுமொழி யின்பயனதாகுமுலகீர், வான்கும்பிடும் பேறு பெற்றானுமீசனை வணங்குமவரடியரடியார், தான் கும்பிடுந்தெய்வ மென்னுமடிமைத்திரந் தலைமிசைக்கொள் ளல்கடனே. (அகூ)

எப்பொருளுமீசன்வடி வேயெனுமறைத்துணிவினைக் குறித்தந்தவண்ண, மப்பொருளுரைத்தந்த நிலைநின்றவன் றன்னை யான்றசற்குரவனென்றுங், கைப்பொருளெனக் காக்கும் விதிவேண்டுமாயாத காயசித்தியுமதற்கா, மெய்ப் பொருட்டுணையுமிக வேண்டுமுலகிற்றனிசெல் விரதிகட்கா காததே. (கூ௦)

அங்கியுமதிற்றகித் திடுமாறுசொன்னவனு மவ்வுடனு மற்றியாவு, மெங்கினுமிருக்குமெய்ப் பொருள்வடிவமேயா மெனிற்சிறிதுமீனமின்றே, சங்கியல்குழைக்காது முதலிய குறிக்கொளிற் ருனிடுதழற்செற்றையு, மங்கியொழி யொண்ணுது சமணர்முற்சம்பந்த மதலையிடுசுவடிசான்றே.

அனகவிரதங்கருணை யாதியநலம்பலகொ டவிர்தாயு மானவன்ருன், பனகமணியும்பர னுருக்கருதிடாவெறும் பாசாண்டனல்லனுடி, மனநிலைபெறும்பொழுதி லதனைக் கரைத்தெங்கு மருவுநிட்களநாட்டமுற், றுனலரியமுத் தியே கருதிமுயலுற்றனனி வுண்மையுணர்வதுமருமையே.

முள்ளொன்றுதைத்திடினு முயிர்பதைக்கச்செயுடன் மூட்டியநெருப்பிலிட்டு, மெள்ளொன்றினளவுமசை யாம னெடுநேரம்வெந் திடநின்றநிலையற்பமோ, கள்ளொன்று மதுரக் கவித்திறமுபாசனைக் கண்ணிலார்களுமடைவரோ, விள்ளொன்றுதுவிதவத் துவிதமெனிரண்டுமெனும் விர கடைவதருமையாமே. (௯௩)

## நம்பியாண்டார் நம்பி சருக்கம், ௨௫.

நல்லவர் பெரிது போற்று நம்பியாண் டானம்பிப்பேர்
வல்லவன் பகர்ந்தநூலின் வகைசொல்வார் சிலரேயுள்ளார்
கல்லதூ டருளின்றென்னக் கடைப்படு மதத்தோர்தம்மை
வெல்லவன் னவன்போல்வாரை விரும்புநர் பலருள்ளாரே.

## உமாபதிசிவாசாரியர் சருக்கம், ௧௪, ௧௯-முதல், ௨௨-வரை.

குலையொடுபழுத்தாங் கனிவரும்வேள்விக் கொலைசெ யுங்குலத்தினிற் பிறந்தோ, னிலையிடுவார்க்குங் கதியைநல் கிடுந்தன் னிணையடிப்பெருமைதேர்ந் தெனைத்தும், புலை

யுருச்சைவா சிரியனுகிடவும் புரிந்தருள் புராணபுங் கவன்ருன், மலையணுவாக வணுமலையாகச் செய்யவும்வல்லவன்ருனே. (௩௫)

அங்கியில்விழுந்தார் கழுத்தறுத்திட்டா ரசலமேற்போய்நிலத் துருண்டார், பொங்கியகடனீரிடைபுகுந்திறந்தார் பொறியடக்குபுதவஞ் செய்தார், தங்கிளை துறந்தார் தமிழ்த்துதிசெய்தார் தாங்களுங்காண்பரிதாய, செங்கிரியனையாற் றில்லையிற்பெத்தான் சேவைசெய்திடலருமையதே. (௩௬)

காண்டலுமுருகிக் கண்கணீர்சொரியக் கரங்குவித்திறைஞ்சியே விழுந்தா, னீண்டவனறியாத் துணைப்பதத்தொருவ னின்விருப்பியாதென வினவ, வீண்டயன்படையாப்பெருங்கதியன்றி யாதும்வேட்டிலனென விசைத்தா, ஞண்டநனிரக்குந் தகைமையோரான்மா வடைகுவதரிதரிதே. (௩௭)

தலைகளையுடலைக் கனலிடையெரித்துந் தவளமால்விடைமிசை தகைசான், மலைமகண்முருகோ னுடனுறச்சகல வானவரிடையரற்கண்டு, நிலைபெறுபயன்வேண்டாதழிந்திட்ட வுயிர்களுநிலத்திருந் தனவாற், புலையரிற்பிறந்தவுயிரிதுகேட்ட புதுமையென்னெனப்புகல்வேனே. (௩௮)

தேவர்தானவர்மாமுனிவரர்மனிதர் திரள்களிற்றவஞ்செய்தோர்க் கொல்லாஞ், சேவதன்முதுகிற் பலர்தனைச்சூழ்ச் சேணிடைதிகழ்தருமீச, ஞவலந்தீவிற் றில்லையிற்பெத்தா னனவினிற்றனிவரு மாட்சி, யாவரே யறிவாரவன்செயுந்தவத்தை யென்னெனவியந்துரைப்பதுவே. ()

௸—௬௧.

முள்ளியின்செடியு மடைந்ததேயாமான் முத்திமாத் திரம்பெற லரிதன், றெள்ளிடுங்கொடியோர்க் கிடர்மிக விளைத்திட் டேத்துநர்க்கின்பமீந் தருளி, வள்ளிநாயகனே மாயனேவெனப்பார் மதிப்பவாழ்ந்ததன்பின்வீ டடைத, றெள்ளிமையாமென் றுணர்ந்துழைக்குநருந் திரைகடற் புவியிலுள்ளாரே. (௧௦௦)

கச்சியப்பக்குருக்கள் சருக்கம், அ.

பொருளின் மிகையோர் புரிதல் புகழே யெனினு மிகழ்வே
யருளின்மிகையோ ராற்ற லழிவேயெனினு மறமே
தெருளின்முதியோ ருணர்வார் சிறியோருணரார் சிந்தை
மருள்கொண்டுலகிற் சிலர்பால் வாதிட்டுழல்வார் மன்னே.

இரட்டைக்குரவர் சருக்கம், உஅ, ௩உ, ௩௩.

அணிகுறிப் பேதமாதி யாயசம் பிரதாயங்க
ளெணியவை கலையின்பேத மென்பவ ரிளமையோரே
கணிசமா முகினேர்வண்ணக் கண்ணனே பரமென்றோதுந்
துணிவினர் செய்கையாவுந் தூயவே யாகுமாதோ. (௧௦உ)

இருகலைப் பகுப்புமொப்பி யிவையுண்டா வதன்மு னுள்ள, வொருகலைத் தகையுங்கைக்கொண் டொழுகு தொண் டனைக்கண்டாலு, மருவருத் தொருதன்கூட்டத் தவரையே மதிக்குமந்தப், பருவமுற் றவரேயிந்தப் பார் மிசை பலருள்ளாரே. (௧௦௩)

தன்னுடைக் கடவுட்குண்டு தனிப்பரத் துவமென்கின்றோ
னென்னுடை யவனுனு மினமெனத் தழுவும்பெற்றி

மன்னுமெஞ் ஞானயோகி மனிதனே யெனினுமன்றோ
னன்னுதற் றிருமணுள னல்குநான் முகனன்னுனே.(கoச)

### பகழிக்கூத்தர் சருக்கம், கசு, நந.

தெய்வச்சாதியிற் சேர்ந்ததெஃதாயினுஞ் செறிவார்
நைவதாற்றிப்பி னருடரும்வழக்கமு நம்பு
மெய்வழக்கினர் துயருறில்வீரமே லீட்டாற்
செய்வதோர்ந்திடா தொழுகலுந்திகழ்தரும் பொருட்டே.

அதனிற்குக்குடம் வெண்ணிறத்தினதென வறைந்த
விதமெல்லோர்களு மறிகிலார்மிக்கமெய்ஞ் ஞான
பதம்விழைந்துசற் குருமொழிப்படியுபா சனைசெய்
திதம்விளைத்திடத் தருகவுமாரர்த மியல்பே. (கoசு)

### இருவயிணவர் சருக்கம், கக, கஉ.

சத்தேசித்தாகியதே யானந்தமயமாகுந் தகைதே
ருன்பாற், புத்தேளிர்க்கிதம்புரிந்து புலைத்தகுவர்குடி
கெடுக்கும் புனிதமூர்த்தி, யெத்தேவுமென்வடிவ மன்றி
யிலைமுக்காலு மிதுமெய்நீதா, னித்தேகத்திதுகுறித்தா
யத்தேகத்தது குறித்தா யென்றிட்டப்பால். (கoஎ)

அந்தவாசனைக்கரும சேடமுனக்கிருக்கின்ற தாற்
றித்தீர்த்தி, கந்தவேண்முற்றிலுமென் னங்கிசமேயுலகினி
லுங் கற்றோர்சொல்வா, ரெந்தமூர்த்தியுமென தங் கிசந்
திருவங்கிசமெனச்சொ லிருபாற்றேயாஞ், சொந்தவாண
வத்தொடர்பாற் றுயரடையேலெனவிரிவாச் சொல்லிப்
போனன். (கoஅ)

## வரதுங்கபாண்டியர் சருக்கம், ௨௯.

சிகையுமுப்புரி நூலுநன்மனைவியுந் தீயவேயெனநீத் துத், தகைமலிந்தகல் லாடையும்புனைந்தவர் தமைநிகர் தமையன்மேற், பகைமலிந்துபோர்க் கெனப்படையெடுக்க வுஞ் செயுஞ்சினப்பண்பெந்த, வகைசெயாதிந்த வுலகினி லெனவற மாய்ப்பர்நன்மதியோரே. (௧0௯)

## கவிராசபண்டிதர் சருக்கம், ௪௮.

புன்மையாய வூனுடன் புகைத்தெணீரு முண்பதே
நன்மையென்று கொண்டுளானு ஞாலமீதிலிப்பெருந்
தன்மையெய்த நல்கியாண்ட தாயருட்ட வத்தரெவ்
வன்மையெய்த நல்கிடாண் மதித்தறிந்து கொண்மினே. (௧௧0)

## அபிராமப்பட்டர் சருக்கம், ௨௭.

இலவினிற் கனிவிழைந் திடினுமெய்தலாற்
புலமைசா லடியர்தம் புகழ்முற் போர்த்தொழில்
வலவரா மன்னர்சீர் மழுங்கு மாட்சிமை
நிலமொடு வானமு நிலவ லுற்றதே. (௧௧௧)

## ஒட்டக்கூத்தர் சருக்கம், ௨௨.

செயமொடு தோல்விதத்தந் திறத்தினுற் பெறுவதன் றன், றியலுமுன் வினையினலென் றியம்பலா மிதுவே யுண்மை, மயல்செய்நீ ருடனூனுண்பார் மதஞ்சில்கால் வலிமைத்தாகி, யயனுவல் சமயமாறு மலமர லதற்கோர் சான்றே. (௧௧௨)

## காளமேகப்புலவர் சருக்கம், ௫௩.

கொழுத்திலங் கியகுன்றேய்க்குங் குஞ்சரக் களிற்றி னெஞ்சும், பழுத்திடும் புலமைவாய்ந்த பாவலன் கருத்

தும்பாழ்த்த, சுழுத்திசித் திரையேபோலுந் தோற்றமுற் றிருந்தவென்றால், வழுத்தினர்க் கருள்செய்வாணி வலிய லாற் பிறிதொன்றுண்டோ. (௧௧௩)

வசைகவியாண்டான் சருக்கம், ௬௬.

வாக்குவலிவெகுவாகப் பெற்றரியவண்ணமெட்டும் வழங்குவார்க்கு, மாக்குவதுமழிப்பதுவும் பெறலரிதென் றுணர்ந்தோரே யாண்டான்சொற்போய்த், தாக்குமதிசய முணர்வார் தவஞ்சிறிதுமுயலாராய்த் தருக்கங்கற்றுப், போக்குவரவுணராமற் புலம்புமிளங்கவிஞருளம் புகுந் திடாதே. (௧௧௪)

வீரபாண்டியப்புலவர், ௩௧.

ஈசனைத்திண்கைச் சிலையிஞலடித்திட் டிகபரமளந்த தாட்டிருமால், பாசமார்தருதேர்ப் பரியினமுகைக்கும் பாகனும்பரிசுபெற்றேனும், வாசனைப்பலத்தால் வேட்டு வச்சிசுவா மகிதலத்தினிற்பிறந்ததனுற், றேசுடனயிக்க மாங்கதிவிழையுஞ் சிந்தையுமெய்தரிதம்மா. (௧௧௫)

கந்தசாமிப்புலவர் சருக்கம், உ௫, ௪௪.

செய்யவேற்படைகொள் கையன்மேற்பலபல் செய் யுள்சாற்றும்வலி யெய்தினர், வையமேற்புனித மெய்யர் தாழ்ச்சிசொலி வைததீக்குலர்த மில்லின்வாய், பையலாப் பிறவி கொள்ளிலாற்றலொடு பௌவமேய்த்தபுக ழொல் லிவா, னையர்வேட்டிடவு மல்குசாட்சியிவ னல்லதார்க்கு மிலை யுள்ளவே. (௧௧௬)

பத்தியுஞ் சித்தியும் பழுதின் முத்தியு
முத்தியி னளவினி லுயர்வுந் தாழ்வுமாஞ்

சித்தியே யுலகினர் தெரிதற் பாலது
சத்திய மாமனச் சாட்சி மேலரோ. (௧௧௭)

## ஆறுமுகப்புலவர் சருக்கம், ௨௪.

பொருளின்மிக்கவ ரிற்சிலர்தக்கசில் போகமும்புசி யாதொழிவாரவா, றருளின்மிக்கவ ருஞ்சிலர்செய்யுமா றறிவுரும லடைந்திடுவாரையோ, தெருளின்மிக்கவர் சித்திகள்பற்பல செய்துவிட்டினுட் சேரவல்லார்களே, யிருளின்மிக்கவ ராண்மைகண்டுஞ்சின மெய்திடாம லிருப்பதும் பாவமே. (௧௧௮)

## சீநிவாசப்புலவர் சருக்கம், ௪௦, ௬௫.

தெள்ளிய வுணர்வினோர்க்குஞ் சீரிய புலமையோர்க்கும்
வள்ளிய விரதத்தோர்க்கு மாசறு குலத்தினோர்க்கும்
புள்ளிய புலிபாம்பாதி புணருற வுறினுமாகு
மொள்ளிய பருவமாத ருறவொன்று முறவொண்ணதே.

அருள்பெற்றுரைத்த படியேநடாத்து மடல்கொண் டிலங்குபுலவோ, ரிருள்பட்டதீய வினைசெய்தபோது மிசையாமுடிந்துவிடுமெய், மருளற்றவேத நுவல்சாதியோருள் வருசீநிவாசன் மதியோர், வெருடட்டர்பெற்ற மகளைக் கவர்ந்து மிகுமாட்சியெய்தல் கரியே. (௧௨௦)

## முதுகுளத்தூரர் சருக்கம், ௧௮.

சிறுதேவர்கள் பலர்தந்தயை சேரப்பெறு மொருவ
னறுதேவரி லொன்றைத்தொழு மவர்மேல்வெகு ளுவனே
லிறுவானெனு முண்மைப்பய னிக்காதைவி ளக்கு
மறுதேவிலை யென்றென்றைவ ணங்கும்பயன் வலிதே. ()

நெற்குன்றவாணர் சருக்கம், உசு, உஎ.

பொற்புறுசெல்வமுமிடியு மாறிடற்குமரசனுளிற் பொங்குங்கோப, மற்புருவாயினுமாகு மென்றிடற்குநன் மனையா ளாக்கத்திற்கு, நற்புருடர்பண்பினுக்கு மேனைக் கும்பத்தரெங னலிவுற்றாலும், பிற்புளகெய்திடுதற்கு மிக்க தையோர்சான்றாகும் பேசுங்காலே. (கஉஉ)

ஆணுருவாயுயர்குலத்திற் பிறந்துபெருஞ்செல்வமநு பவித்திட்டாலுஞ், சேணுநிலமும்புகழும் பெருங்கீர்த்தி விளையாமற் செத்தாராயின், மாணுறுதென்புகலூரான் றிருவடிக்கோர்தமிழ்மாலை வாங்கிச்சூட்டி, நாணுமடமுந் தவிர்ந்து வாழ்ந்தமகளினுந்தாழ்வா நவிலலாமே. (கஉ௩)

தலைமலைகண்டதேவர் சருக்கம், ௪௦.

எத்தனைபேர்க்கோ விடைமிசைபரம னெய்தியின்ன ருள்செய்தானென்பா, ரித்தகைவிளையாட் டொருவருக் கேனு மியற்றினனென்கைகேட்டில்லேன், பத்தமார்மனை யுஞ் சுத்தமுநழுவாப் பத்தியும்பழுதின்மாதுரிய, முத்த மிழ்க்கவியு முடையவர்பெருமை மொழிந்திடின்முற்றுரு தன்றே. (கஉ௪)

பிள்ளைப்பெருமாளையங்கார் சருக்கம், உரு, உஎ.

அரனரிக்கடி மைத்தொழிலாற்றுவார்
பரவுபல்பவந் தீர்ந்தபின்பாண்டியன்
கரவின்மந்திரி யைப்புளிக்கண்ணுழை
யுரமுளானையொப் பாவரிதுண்மையே. (கஉரு)

நாம மொன்றை நவின்றவர்க் கும்பெரு
வாம மார்திரு வைகுந்த நல்குமால்

பாம லர்த்தொடைப் பாகவ தற்கதன்
சேம நல்கல் வியனன்று தேரினே. (௧௨௬)

## முத்துவயிரவப்புலவர் சருக்கம், ரு.

இருக்கினுநிற்கினு மெங்குநடக்கினு மெவ்வாற்றூற்
றருக்கினுநொந்துத விக்கினும்வேல்புனே தருசெங்கைத்
திருக்கிளர்தேவனு ளானெனவன்பொடு சிந்தித்தே
நெருக்கியிராப்பக லாவுருவேற்றின னெடுநாளே. (௧௨௭)

## பாணப்புலவர் சருக்கம், ௨௦.

நொண்டிகுருடுசெவிடுமுத னுவலுமெவ்வூ றடைந்தாலும், வெண்டிங்களுநா ணுறுங்கமல மிசைவீற்றிருந்தாண் மெய்யருளாற், கண்டிலினிய கவிபாடிக்கடல்சூழ்புவிபோற் றிடத்திகழ்வோர், தெண்டிரையில்வந் தவிர்திருமின் செயல்பெற்றவரிற் சிறந்தோரே. (௧௨௮)

## சத்திமுற்றப்புலவர் சருக்கம், ௩௦.

இட்டதெய்வஞ்சோ தனைசெய்நாள்வாயில்காத் திருக்கப்
பட்டமாந்தரு மிகழ்ந்ததுமருள்செய்நாள் பகைவே
ரட்டமன்னவ னுள்விடுத்தழைத்திதஞ் செயலுங்
கட்டமுற்றுழல் பாவலருணர்வது கடனே. (௧௨௯)

## முத்துலுக்கப்புலவர் சருக்கம், ௪௨, ௫௩, ௫௪.

அவ்வாறிசைத்திட்ட தவர்தெய்வமேயென்ற னவர் கூறுவா, ரிவ்வாறுசெயலுங்க லைப்பாவையருளென்ப ரிவரெம்மதத், தெவ்வாறுவிளையாட லுந்தெய்வமொன்றென் னு மியல்பாளரே, வெவ்வாதனைத்தொந்த முழுதற்றமெய் ஞ்ஞான மேயார்களே. (௧௩௦)

ஒருமதத்தோன் மற்றோர்மதத் துறுதேவைப் பணிந்தாலு
மருளடைந்தா லுலகமுழு தவன்மொழிக்கஞ் சுவதுண்மை
குருவிகற்ப மேமதங்கள் குறித்தபர மொன்றென்னுந்
தெருளடைவ தெளிதன்று செய்தவமுற் றிடிலாமே. ()

கொல்லாநன் னெறியாளர் கொலைச்சமயம் புகறீதாம்
புல்லாற்றுக் குரியவர்தாம் புனிதநெறி புகன்மேன்மை
கல்லாருங் கற்றாருங் களிப்பதுண்டு கவறலுமுண்
டெல்லாமு நன்குணர்கா லிறைவனருட் டிருக்கூத்தே. ()

## பலதேய்வப்புலவர் சருக்கம், க.

பொருளுடையார்களிற்சிலர்தா மநுபவிக்கத் தக்கபயன் புசித்திடாம, லிருளுறுபாழ் நரகடைந்தாங் கருளுடையாரினுஞ்சிலர்தா மியற்றவேண்டுந், தெருளும்வினையுணரார யாயுளினைக்கழித்துச் செனனமெய்தி, மருளுமிடர்ப்படுவரென்கைக் கீண்டுரைக்கு மிச்சரிதம் வயங்குஞ் சான்றே. (கங_ங)

## அறிவுத்தன்மைப்புலவர் சருக்கம். ரு, சு, எ.

சொற்சுவையுந் தெய்வீகந்தோய்திறமு முறப்பாடிச்
சிற்சுகவா ரியின்மூழ்கித் திரும்பாவீட் டுறலரிதாங்
கற்சுனைச்சீர்ப் பொதியைமுனி கமலமலர்ப் பதம்போற்றி
யெற்சுடருள் வளர்தேவை யெண்ணுவார்க்கெய் துவதே.()

எத்திறச்சித் திகள்செய்த வியற்றமிழ்ப்பாட் டாளனும்
பத்தியுளார்கொண்டாடப் படியிடத்திற் கிடக்கின்ற
வத்திறமன் னவர்தம்மோ டகன்றதனு லழியாத
நித்தியமாம் பொருளெண்ணி னீடுகவித் திறமொன்றே. ()

அருள்பெற்ற பெரும்புலவர்க் கடங்காத னவுமுண்டு
மருள்பட்ட சிறுபுலவர் வாக்கினடப் பதுமுண்டா
லிருண்முற்று கருங்கூந்த லேந்திழைச்சீர்க் கலைவாணி
தெருண்மிக்க திருவுளத்தின் செயலளத்தற் கரிதாமே. ()

ஷை சகூ.

மூடனையடக்கற் குபாசனைத்திறத்தான் மொழிப்ப விப்பியற்றலேயாகும், பாடலின்றிறமை காட்டலே கல்வி பயின்றவர்ப்பணித்தற்காமிரண்டுங், கூடலுத்தமமா மொன்றுபெற்றொன்றைக் குறித்திடாதுழல்வது கொடிதே, யேடலர்தவளக் கமலமீதிருப்பா ளீந்திடாவிடிலெது மிலையே. (கஙஎ)

கண்கண்டபுலவர் சருக்கம். கஎ, கஅ, உ௦.

செத்தவர் மீண்டெண்டெய்தச்செய்தலுஞ் சிலர்கொள் பேறே, யித்தரை யினரும்வானத் தினருமூ னருந்தா தாற்று, முத்தமத் தருமமற்றோ ரொருவர்வேட் டதுமன் றுமான், முத்தமிழ்ப் புலமைச்சீலர் முன்னிநன் குணர்தற் பாற்றே. (கஙஅ)

இராகவன் கண்ணனன்ற விருடியாம் பிருகுவன் றித், தராதலத் திந்நாள்வந்த தவத்தினர் சிலருமீட்டார், பராவுகா ருணியதீர்க்கம் பகவனு தியின்பாலீன்ற, நிராசை யோர் முதலோர் நூலி னிகழ்த்தினு ரியற்றிலாரே. (கஙகூ)

பத்திர கிரிதன்னுயும் பசியுமுள் ளியுமுன்பெற்ற
முத்தியோ ரரும்பேறன்று மூதுல கினையீடேற்ற
நத்திடுங் கருணையேமே னரண னனையரோர்வார்
சித்திபெற் றிடினுமற்பர் செயலறிந் தியற்றாரம்மா. (கச௦)

உ

குருவே துணை.

# பத்திவிசேடத்திரட்டு

## இரண்டாம் பாகம்

### பக்தமான்மியம்

சந்திரதத்தர் வரலாறு, ௩க, ௩உ, ௩௩, ௩௪.

புத்திநல்கும்விட் புலத்தருமெச்சருட் புலமைச்
சித்திநல்கிடுஞ் சென்னமா ரணத்திடை சேரா
முத்தியுந்தரு மென்றிடின்மூவுல கத்தும்
பத்தியொப்பதாம் பொருளுளதேகொலாம் பார்க்கின். (க)

எலையில்பத்தியா லெய்துமின்பத்தினை யிகந்து
நிலையிலைம்புலந் தருசிறுசுகங்கொள நினைத
லலையுலாவுவான் கங்கையைவிட்டவ மாரும்
புலையரங்கணம் புக்குருள்புன்மையே போலாம். (உ)

மூன்றுநாள்பக வன்றுணைத்திருவடி முளரி
நான்றுதித்திட வித்தகையின்புற நல்கி
லூன்றுநாளெலா மோவறவென்னுளத் துன்னில்
யான்றுதைந்திடற் கரியதோர்பேறுமற் றெதுவே. (௩)

மருத்திகழ்ந்திடு பத்தியாரமிழ்தினை மாந்தித்
திருத்திகண்டவென் மனமினிச்சிறுமைதோய்செகப்பொய்

விருத்திகொண்டிடா தலகில்பேரின்பமே விடுவான்
கருத்திசைந்ததென் செயன்மிகநன்றெனக் களித்தான். ()

ஷ சுo.

ஒடிவிலாதமெய்ப் பத்திமையுற்றவ ரூடே
படிவதானவா பத்தையுஞ்சார்வறப் பாற்றி
முடிவிலாதபே ரின்புளூமூழ்குவித் திடுமேற்
படியிலன்னதன் பெருமையாமென் னுரைப்பதுவே. (ரு)

பிராசீனபக்தர்தோகை

ரு-முதல், உஉ-வரை.

நீசவீனக் குலத்தினிலத்திடை
மாசமைந்துதித் தாரையும்வான்பெறு
தேசவிர்ந்திடு தேவர்முனிவரும்
பேசவைக்கும் பெருமிதப்பத்தியே. (சு)

தோன்றுகாலந் தனிற்றொல்லுலகிடை
தோன்றுறப்பெறுந் தூலமொல்வாரையு
மூன்றுகால முறையுணர்ந்தோர்கண்முன்
பேன்றுவாழ்த்த வியற்றுநற்பத்தியே. (எ)

எழுத்திலக்கண மாவதிதென் றுளத்
தழுத்திலக்க ணவாநெஞ்சவரையும்
பழுத்திலங்கியற் பாவலர்பண்டிதர்
வழுத்திடச்செயு மாசின்மெய்ப்பத்தியே. (அ)

கடியவென்புங் கரையவுருக்கியே
நெடியவானி னிறைபரிபூரண
வடிவமாகி வயங்கிடவைப்பது
மொடிவில்பத்தியென் றோதிடலாகுமே. (கூ)

விலக்கதென்ன விளம்பிடுசெய்கையைத்
துலக்கமார்விதித் தூய்மையதென்னவே
தலக்கணுற்றவிர் சான்றவர்வாய்கொடு
சொலச்செய்வித்திடுந் தூயநற்பத்தியே. (க0)

படியின்மீதறப் பாவப்பயன்களைப்
படிவியேனை படிகமொப்பாவன
கடிதிலியாவையுந் தன்மயங்காண்டலாற்
சுடிகைமாமணி சுந்தரப்பத்தியே. (கக)

தன்னைநெஞ்சத் தலங்கொளும் புண்ணியர்க்
கென்னையின்பமு மங்கவரிச்சியா
முன்னையெய்த முடித்தலின்மூதரு
ளன்னையொக்கு மவிர்தருபத்தியே. (கஉ)

படியின்மேன்மைப் படுங்குலந்தோன்றியே
வடிவுகொண்டு வயங்குநர்தம்மையுங்
கொடியவினைக் குலத்துதித்தார்களுக்
கடிமையாக்கிடு மாசின்மெய்ப்பத்தியே. (கங)

திரிமலத்தின் றிமிரறச்சாடுபு
விரியவுள்ளக் கமலம்விளக்கியே
யுரியதேவினை யுள்ளுறக்காட்டலாற்
பரிதியொக்கும் படியறுபத்தியே. (கச)

பொங்குமின்புருப் புத்தமுதீந்தவி
ரங்கமெய்தியண் ணித்தினிதாகியே
மங்குகாமுகர் மாறெனக்காண்டலாற்
றிங்களொக்குந் திருந்தியற்பத்தியே. (கரு)

கடவிடும்பரி காரமிலாவணம்
பட்டர்தருங்கொடும் பாவவுருப்பெருங்
கடலேவற்றக் கணத்தினிற்காண்டலால்
வடவையொக்கு மகிமைகொள்பத்தியே. (கசு)

காயவாழ்க்கையர் கண்டிடுகன்மமுந்
தூயமாட்சியர் தோயுமெஞ்ஞானமுந்
தோயவோரிரு பாலுந்துணைநடு
நாயகம்பொரு மானவில்பத்தியே. (கஎ)

ஆக்கும்வேத னறியுஞ்சகலமெய்
போக்குநாதன் புகுதருகேவல
மேக்குறுதுயிர்க் கின்பருள்சுத்தமா
லேய்க்குமற்றொன் றிணையறுபத்தியே. (கஅ)

காயகன்மக் கடுஞ்சிறைக்குட்டுய
ரேயவாருயி ரென்றிடுகன்னியைத்
தூயஞானத் துணைவனிற்சேர்த்திடு
நேயநற்றுணை நேரறுபத்தியே. (ககூ)

அருவமாகி யவிர்பரந்தன்னைநா
டுருவமாக்கி யுளத்திடையோவற
மருவவைத்துப்பின் மாநிலமீதினும்
வருவதாக்கும் வளம்படுபத்தியே. (உ0)

குணமுடன்றனை யுள்ளுறக்கொண்டவர்க்
கணவுவிக்கின மியாவுமறுத்தொரு
கணமதிற்பயன் கையுறக்கூட்டலாற்
கணபதிக்கிணை காமருபத்தியே. (உக)

மண்முகக்கன்ம வாதனைமாற்றியே
யுண்முகத்தி லொளிர்தருஞானமெய்
விண்முகத்தில் விரவிடக்கூட்டலாற்
சண்முகற்கிணை தன்னிகர்பத்தியே. (உஉ)

பொத்துமும்மலம் புல்லுயிருக்கருட்
சித்திமுத்தித் தெரிவையர்போகமா
மெய்த்திளைப்பின் விருப்பமளித்தலாற்
சித்தசற்கிணை சின்மயப்பத்தியே. (உ௩)

புத்தியுட்டனைப் புல்லுறுபான்மைய
ரெத்திறத்தின ரேனுமவர்களை
மெய்த்திறற்கட வுட்டொகைவேட்டணை
சத்தியிற்கொளச் சார்த்திடும்பத்தியே. (உச)

பேசலென்பல வாறருப்பெற்றிய
தேசவிர்ந்தமெய்த் தெய்வமுஞ்சிந்தையிற்
பாசநீங்கருட் பத்தர்பணிசெயற்
காசைகொண்டிடு மென்னிலதிகமே. (உரு)

ஷை உகூ - முதல் ௩அ - வரை.

புகலரும்பல் விதத்திற்பொருந்திய
சகலருக்கு மவரவர் தன்மையி
லகமுளிச்சித் திடுதலனைத்தையு
மிகவளித்திடு மேதகுபத்தியே. (உசா)

அகமுருக்கி யவிர்பத்தியல்லது
நிகரிலாது நிறைபரிபூரணப்
பகவற்குள்ளப் பிரீதிபயப்பதாந்
தகைகொளோர்பொரு ளின்றெத்தலத்துமே. (உஎ)

நறைகொள்வாரிச வாசனநாபியன்
கறைகொணீலக் களப்பரமேசுர
னிறைவியாகு மெழின்மகதேவியு
மறைவகுத்திடு பத்திவசத்தரே. (உஅ)

இணங்குதேவர் முதற்பதினெண்வகைக்
கணங்களுங்கொடுங் கான்விருகங்களும்
விணங்குலாவும் விரிசிறைப்புட்களு
மணங்கொள்பத்தி வசத்தினரென்பவே. (உகூ)

சார்ந்திடுஞ்சமு சாரத்திருந்துமுட்
பேர்ந்திடாது பிரான்பிரசக்கழ
லார்ந்தபத்தியு ளாழ்ந்தவராவரேற்
சேர்ந்தவிட்புலத் தேவர்தந்தேவரே. (ங0)

அன்னரேசரத் தோடசரங்களென்
றுன்னலுற்ற வுலகமுழுமையு
மின்னநீர்மைய வென்றறிவாலுணர்
தன்யரென்றுபன் னூல்களுஞ்சாற்றுமே. (ஙக)

அழிவதின்றி யவிர்புருடார்த்தங்கொள்
வழிகளாகிய பற்பலவற்றையு
மிழிவதாக்கி யிசைக்குமவைக்கெலாங்
கழிநலத்தது காமருபத்தியே. (ஙஉ)

"எனதுபத்த னிறத்தலில்லானென்றுங்
கனவுநேர்பல் கருமமும்விட்டெனை
மனதிலுடில் வருபவமாற்றுவே
னுனதுநெஞ்சத் தொருதுயரொன்றிடேல். (ஙங)

சிரத்தையோடெனைச் சிந்தைசெய்வாரென்னந்
தரத்தினிட்டார்க ளாவர்தளிர் துணர்
பரத்தநீரிவை பத்தியினுலிடுந்
திரத்தர்பூசை திருத்தியெற்காகுமே." (நூச)

என்றுபார்த்த னிதயங்களிப்புற
நன்றுநம்பக வான்முன்னவின்றதா
லென்றுமானு மிலங்குமெய்ப்பத்தியே
துன்றுமேனைய தொல்லுடுக்கூட்டமே. (நூரு)

ஷை சஅ, சகூ, ருo.

மயலிற்கோபிக ளுந்தன்மனத்திடை
பயமிகுந்து பவமலிகஞ்சனு
முயறுவேசத்தின் மூள்சிசுபாலனு
மயர்விலாதுட்கொ டானந்தமெய்தினுர். (நூசா)

மூடஞ்ஞானங்கொ டோமுழுமோகத்தோ
வாடுலோபத்தி லோபிரமாதத்தோ
நாடுவார்பக வானடிநாடொறுங்
கூடுதற்கரி தாநலங்கொள்வரே. (நூஎ)

தேவரேமுத லாப்பட்சிகள்வரை
யாவதான வுயிர்களினீட்டமு
மாவலோடு பகவனடிநினைத்
தோவலில்கதி யுற்றிடலுண்மையே. (நூஅ)

நாபதாசர்கதி, சக.

தன்னருட் குரவன்மெச்சுந் தகையுறப் பெற்றபோது, மென்னயான் பெற்றதொன்றென் றியம்புதற் பழிப்பு மாற்றந், துன்னருட் சுகந்தோய்பத்தித் துறையுளோர்

கொள்வதன்றிப், பின்னமை நெறிக்கோட்பட்ட பெட்ட ரெய்திடுவதன்றே. (ருகூ)

அநுமார்கதி—உக, ருஉ.

தந்திரமேமிக்கதெனச் சாற்றிடுமெச்சமயத்தைச் சார்ந்தோரேனுஞ், சந்திரஞ்செஞ்சுடரணைந்தாற் போலு ருகமனமிறைவன் றுளைப்போற்றி, யிந்திரவியியக்கமறுந் தலத்திலநுமனையிணைய விருந்துசெப்பு, மந்திரமேமந்திர மாக் கொண்டவரேபத்தசிகா மணியாவாரே. (சO)

மெத்தியல்வேத கோடிகட்கறியா விமலமெய்ப்பகவ னேயநும, னத்தியவடிவம் பெற்றனேன்வருகை நாடுவந் தவன்றொழலு, மொத்தியன்றிடத்தன் னருகினிலிருத்தி யுவப்புடன்றழுவிடுநலத்தைப், பத்தியல்லாதொன் றளிப் பதீண்டுளதோ வுளதெனிற்பகர்மினோபாரீர். (சக)

சபரிகதி, கOகூ, கOஅ.

ஆசகன்மேற்குலத்தாணுப் பிறந்துளவெத்தகைய ரையு மவசானத்தி, னீசர்கரத்திடையளித்துத் திரும்பு பெருவழக்கமைந்த நிலத்தின்மீதே, யேசமைபுன்குலத் துதித்தாட் கிராகவனங்கித்தொழில்செய் திட்டானென் றுற், பாசமகற்றுயர்பத்தி மான்மியமித்தகையதெனப் பகரலாமோ. (சஉ)

நீசகுலத்திற்பிறந்த சபரியெங்கேயவடனக்கு நேர்ந்த தான, மாசகன்மெய்க்கதியெங்கே யற்புதமற்புதமென்ன மகிழ்ந்திட்டின்பார், நேசமலிபத்தியிலா தாரேகீழ்க் குலத்தரென நிகழ்த்தியொப்பி, றேசவிருமிராமவிலக் குமணர்களைத்துதித்திருக்கை சேர்ந்தாரன்றே. (சஙு)

அசாமிளகதி, சுக.

சாவுற்றிடு காறகிங்கரர் தமக்கஞ்சுபு மகனைக்
கூவுற்றிடு கொடும்பாவிகைக் கொள்பேறிது வென்னி
னுவுற்றிடு நாராயண நாமஞ்செபித் தவன்றூண்
மேவுற்றிடும்பெரியோர்பெறல் விள்ளும்படித்தாமோ.(சச)

சடாயுகதி, ருஉ, ருங.

தனயனுப்பெறும் பெருந்தவஞ்சான்ற தசரதன்பெ றூத் தகனமாதியவு, மனவசம்பெறும் யோகியர்விழிமுன் வந்துறூத்தெரி சனமகத்துவமும், வனமுறும்புள்ளாஞ் சடாயுபெற்றமைந்த மகிமைதன்னையுண் மதித்தறிவார்க் கே, யநகபத்தியின் மாட்சியிற்றென நன் கறிவதாகுமே னையர்க்கறிவரிதே. (சரு)

எத்திறத்தனு வெய்துயிரேனு மெய்திற்பத்திமிக் கிருஞ்சுகமெய்து, மத்திறங்கொளா வுயிர்தனுவெதன்பா லடையினுஞ்சுக மடைவதின்றின்றே, யித்திறத்தினுற் சுக முறவிழையு மெண்ணமேய்ந்திடு மியல்புறும்பெரியீர், பத்தியாகிய சுத்தசன்மார்க்கம் படர்மினோபவ விட ரினோவறவே. (சசு)

அம்பரீடகதி, ருச, கoங.

செற்றநீடுரு வாசமாமுனிவரன் றிறலுங்
கொற்றமிக்கவம் பரீடமன்னவனுறு கோட்புந்
தெற்றெனத்தமொர் சிந்தையுட்டோர்ந்துணர்வார்க்கே
துற்றபத்தியின் மகிமையிவ்வாறெனத் துலங்கும். (சஎ)

விரோதத்தோ விடம்பத்தோ வேட்கைகொடோமே வலர்பாற்,குரோதத்தோ மற்றுள துர்க் குணங்கொண்டோ

வரியிருதாட், குரோதத்தாழ் வடையாம லோங்கிடுமன் புற்றவர்க, ளரோதத்தா னவைகளகன் ருனந்தம், பெறுவாரால். (சஅ)

விதுரமங்கைகதி, கச, சரு.

புரந்தரன்முதற் றேவர்யாவரும்புலப் படுவா
னிரந்தரந்தக முயன்றுமன்னவர்கண்முன் னேரா
னிரந்தம்மின்புடை வலிதுகையேற்றன னென்றூற்
பரந்தபத்தியின் மேலொன்றுண்டாங்கொன்முப்படியுள்.

ஆதலாலிலக் குமிபதியாயகிலாண்டகோடிகட்கெல்லா, நாதனுங்கிருட்டிணனெங்கேவிதுரனு நல்குரவோனெங்கே, யாதரங்கொடன் னவனிலைக்கறிநுக ரவத்தையாவது மெங்கே, யீதனைத்நுமெய்ப் பத்திவைபவமெனு திசைப்பதென்னெனவம்மா. (ருo)

குசேலகதி, அங.

பொய்த்திறமாயா புன்புலபோகம் பொருளெனக் கொண்டிடா ராகி, மெய்த்திறப்பகவன் றிருவடித்துணையே மெய்த்துணையாமெனக்கொள்ளு, முத்தமப்பத்திப் பரவையுட்படித லுற்றிடுமியோகிய ராளு, ரெத்திறமுறினு மோரிடையூறு மெய்தலர்சரதமா மாதோ. (ருக)

சந்திரகாசகதி, சக, கூச.

தொகைப்பெரு மறைகளெல்லாந் தொடர்ந்திளைத் தறிதறேற்றுச், சிகைப்பரம் பொருளாயுற்ற சீதரன் செம்பொற்றுளின், மிகைப்படும் பத்திசான்ற மேலவ ராயினார்க்குப், பகைத்தவ ராற்றுந்தீங்கே பாக்கியம் போலுமம்மா.

முத்தானபற்கொண் மடவார்களாதி மூவேடணைத் தொடர்புமற், றித்தாரணிக்க ணியல்கானகத்தி லிசைவுற்றி யோகமுயலு, மெய்த்தாபதர்க்கு மரிதேயெனப்பல் வேதங் கண்மெச்சு மென்னிற், செத்தாரைமீட்டு திறனல்குபத்தி செய்யாதகதேது தெளிமின். (ருங)

## ஷி. ககசு - ககஎ.

இகமிசைத் தோன்றலான வின்னலாஞ் செயல்க ளெல்லாஞ், சுகமெனப் புரியுந்தன்மை தூய்மைசால் பத் திக்கன்றி, மகமுதற் செய்யுங்கன்ம வகைகளுக் கமையா தஃதாற், றகவுளார் தங்கைக்கொள்ளத் தக்கதிஃ தெனன் மெய்யாமே. (ருச)

பத்தியா லெய்தத்தக்க பகவன தருட்பேறுகு
மத்தினன் முடிந்திடாவொன் றகிலமற் றெவற்றுமில்லை
சத்திய மேமுக்காலுஞ் சகத்துளீர் பத்தியில்லார்
நத்திகத் தினுமோரின்ப நண்ணிட முடியாதன்றே. (ருரு)

## பாஞ்சாலிகதி - அச.

இலையயின்றிடற் களிக்கவென்றிரங்கின ரீந்த
விலையயின்றிடக் கிருட்டிணனிருந்தவத் தோர்கட்
கிலையயின்றிட விடமெனவியற்றிய வரிதா
ளிலையயின்றிட பத்திநெஞ்சினர்க்கரி தெதுவே (ருசு)

## வரன்மீக கதி, எக.

சகத்திற்றுணையாத் தாரமகார் தம்மையபிமா னித் துழல்வோ, ரிகத்திற்பலரு மோதுபழிக் கிலக்காச்சுழல்வா ரிதைநீத்திட், டகத்திற்றுணையா மொருவனிடத் தன்பு

சான்ருே ரகன்றுயர்வா, னகத்திற்பலரு மேத்தெடுப்பா
னமைதற்கிவன்சான் ருருமே. (ருஎ)

## உருக்குமாங்கத கதி, அக.

மாது கொண்டநா யகனுயிர்த் தேதன்முன் மருவு
மேது கொண்டகத் துவகைசற்றேனுமெய் தில்லான்
போது கொண்டவற் றந்திடு நாபியன் பொற்ருண்
மீது கொண்டபே ரன்புதன் னுருவமாம் வேந்தன். (ருஅ)

## மயூரத்துவச கதி, ருஎ-ருஅ.

நற்குணமயூரத் துவசனதுளத்தி னயந்தமெய்ப் பத்தியின் பெருக்கு, மிற்குணமனைவி மைந்தனென்றியல்வோரியற்றருஞ் செயல்களா யினவும், பற்குனனுள்ளத் தலைவிரிந்தெழுந்து பரவியபேரகங் கார, வற்குணக்கடலை முற்றறப்பருகு மவிரொளிவடவைபோன் றனவே. (ருகூ)

உவமைதீர்பகவன் பத்தியினம்மை யொப்பவரின்றெனச்சிலத், துவமலிதருமர்ச் சுனனகத்தூடே தோன்றகங்கரக்கொடு நினைவு, நவமலிமயூரத் துவசனற்கீர்த்தி ஞாலமேல்விளக்கிய தென்னிற், றவமலிபெரியோர் கொண்டதீக்குணமுந் தரணியோர்க்கின்பமாம் போலும். (சூ0)

## பிரகலாத கதி, ருஅ.

திடமலிபத்திப் பிரகலாதனன்மெய் தீண்டிடும்பணித்திரள் கொண்ட, விடமலிபற்க ளன்றியேனையவும் விரைவினிற்பொடிந்துகீழ் வீழ்ந்த, சுடருணர் வுடையோர்த் தெரிசனம்புரிந்த துட்டர்க்டொடர்ந்ததீ வினையி, னிடரொழிந்தின்ப மெய்தல்போலியனஞ் சிழந்துநற்றகைமையேய்ந்தனவே. (சூக)

ஷை களஎகூ, கஅ.

வாய்ந்தவரிப் பிரியையெனும் பொன்மனேயுங் குளிர் நாபிவனச நின்றும், போந்தசுதனுமயனு நடுநடுங்கியாமி யற்றப்போகாதென்றே, யோய்ந்தடங்கு மோர்செயலைப் பகையசுரக் குலத்துதித்த வொருவனுற்ற, லாந்தகைநல் கிடும்பத்தி மான்மியத்தை யிற்றெனயா மறையப்போமோ.

உத்தமஞ்கியபிரக லாதனேமிக்கிரணியன்செ யுறுகண் யாவுஞ், சித்தமிசையுன்னுதொறு மவற்றடிந்தும் வெங் கோபந் தீராதாகி, மெத்தவியல்காற்பிரக லாதன்வேண்ட லுமுவகை மேவிற்றென்ருற், பத்தர்கண்மீதரிகொடுள்ள வாற்சலியப்பெருமையெவர் பகர்வதம்மா. (சுரு)

நிம்பாதித்தியகதி, ரு, சு, எ.

விசேடித்துப் பத்தியினே வேதவியா சப்பெரியோ
னசேடித்து மலத்தொடர்பா லார்ப்புண்டுள் ளறிவிழந்து
நிசேதத்தீத் தொழிற்புரியு நிலையரையும் பவங்கடத்திச்
சுசேடித்த பரிபாகந் தோய்தருவான் றேற்றிடவே. (சுச)

சபரிகசேந் திரன்சரிதந் தனைத்திருட்டாந் தப்படுத்தி
விபவமுறச் சொற்றுளதான் மேதகுவன் ஞச்சிரமச்
சுபவழிச்செல் வார்க்கெல்லாந் தோய்பத்தி மாத்திரத்தா
னபமுறுமெய்க் கதியின்ப நண்ணுமெளி தினின்மாதோ.()

ஆதலின்மெய்ப் பத்திநிலை யவாச்சியமென் றிடலல்லா
லோதளவைத் தன்றதனு லுற்றிடுதந் தருமத்தின்
காதலருக் கன்னதுவே கற்பகத்தா ருவுக்கிணையால்
வீதனுறி னுந்தருமம் விடாரறிவின் மிக்கோரே. (சுசு)

ஷை, கச, கரு.

யாவர்சுய கன்மத்தி னிழுக்காத வியல்பினரோ
வாவரிடம் பத்திநிலை யமையும்வலி தினிலிதனுன்
மேவருமன் னவர்பாவ புண்ணியமு மேனியுட
னேவருபந் தங்களறச் சீவன்முத்தி யெய்துவரால். (சுஎ)

எத்தகையார் தாம்பத்தி யேய்ந்தவங்கோ லத்தியலும்
வித்தனைய தன்மைபெற மேவுகில ரன்னவர்க்கிப்
பத்தருண் மரன்மியமாப் பகர்தருகற் பகத்தருவே
யொத்தமையப் புரிந்திடுமோ லோரைய மிதற்கின்றே. (சுஅ)

சாமாதகதி, ருo, ருரு.

நத்தமைந்தகை நாரணற்காற்றெருரு நவையைப்
பத்தராயினர் தாம்பரிகரிப்பர்மெய்ப் பத்திச்
சித்தமேவினர்க் கியற்றிடலாவதோர் தீங்கை
நித்தனுலகற் றிடமுடியாதெனு நிகமம். (சுகூ)

படவராமிசைத் துயில்பவன்பத்தர்கள் செய்யக்
கடவதாகிய செயலெலாங் கருணையா லன்றி
மடமையாலென வெண்ணுநர் மதியுடையாரோ
வடருமவ்வறி யாமையெற்கின் றும தருளால். (எ0)

ஷை சுo.

கடலுடுத்தபார் மிசைக்கவின் றிட்டபல் லுயிரும்
படருறுதரு ளாற்றிதித் தருளுமெம் பகவன்
மடல்கொள்வாரிசத் துணையடிவழுத்துமா தவரோ
ரிடர்பொருந்திடக் கண்டுதான் சகிப்பன்கொ லிதயம். ()

ஷை சுசு.

விதங்களெண்ணில விளம்பியாவருமிக வியந்தற்
புதங்கொள்சிந்தைய ராகியேபுயனிகர் வண்ணன்
பதங்கொளன்புத வின்பவான்கடலிடைப் படிந்தார்
திதங்கொள்பத்தியா லடைந்திடாப்பயனெது தேரின். ()

இராமாநுச சுதி, உஎ, உஅ, உகூ.

மெத்தவென் பதத்திலன்பு மேவிரா மாநுசப்பேர்ப்
பத்தயா னுன்பாலீண்டு பகர்வதொன் றுளது கேட்டி
யித்தலத் தநாசாரத்தி லெனக்கதி விருப்பமன்றிச்
சித்தமேற் பத்தியுள்ளார் செயலெலாந் திருத்தியாமே. ()

பொத்திய மலக்கூடாகும் பூட்சியீ தறலைக்கொண்டு, சுத்திபெற் றுளதேலின்பந் தோய்த்திடு முலகுளோர்க் கியா, ஞெத்திய வுளமாங்கோயி லுண்மைசால் பத்தி நீராற், சுத்திபெற் றுளதேலெற்குட் சுகிர்தமிக் களிக்கு மன்றே. (எச)

பத்தியங் கடலினெஞ்சம் படிந்தவ ரெவரானாலு
மெத்தினை யவர்தந்தாலு மெனக்கதி லிச்சையுண்டா
லித்திறங் கொண்டென்றன்னை யினிதுபூ சிப்பார் தம்மை
நத்தியீங் கெய்தும்வண்ண நவிலுதி கணத்தின்மாதோ. ()

ஷை ருக, ருரு, ருச.

நம்பத்தி சிறிதுநெஞ்சி னண்ணிடா துலகம்மாயா
வெம்பித்த மேவிமெய்யை மெய்யென வெண்ணிவாடும்
வம்பர்க்கு வைத்ததாய வழியெனு சாரக்காந்தை
யும்பர்க்கு மேலாயிங்ங னுறுவர்பாற் சிறிதுமோதேல். ()

அலகைப்பாற் பிணிப்புண்டோர்க ளாற்றிடுஞ் செயல்களெல்லா, நிலவதன் செயலேயாக நிகழ்தல்போ ஞானிலத்தி, லிலகுமென் பத்தராவா ரியற்றிடு கின்றவெல்லாங், குலவுமென் செயல்களாகிக் கொடுத்திடு முவப்பெனக்கே.

மற்றமை நெறியெவற்று மருவ்தி காரத்தன்மை
சற்றமை கில்லார்தாமோ தரனடி பிரிதலில்லாப்
பற்றமை பத்தியுற்ற பண்பினுற் பகவற்கோகை
பெற்றமைந் தாரேற்பத்தி மான்மியம் பேசலாமோ. (எஅ)

சீரங்கபத்த கதி, ௬அ.

ஒருதினந்திரு மாலருட்பதம்படி யுதகம்
பருகினேன்பவம் பொலிபிரேதத்துருப் பாற்றித்
தருவுலாவுல கோர்புகழ்தகைமையேய்ந் தனனேற்
பொருவில்பத்தர்கண் மாட்சியென்னுற்சொலப்போமோ.

விட்டலபுண்டரீக கதி, க0அ.

நேராகப்பலயுகங்க ணிற்பவுந்தாளலதுமுக நிமிர்ந்துசற்றும், பாராமனிற்பவளைப் பிரியாதுநின்றகண்ணன் பரிவாயின்றோர்க், காராதனம்புரியும் புண்டரிகற்காப் போஞ்சீ ரறைந்துநீங்கிற், ருராளப்பத்தர்கடம் மான்மியமித்தகைத்தெனநாஞ் சாற்றலாமோ. (அ0)

நாமதேவ கதி, ருஉ, க0ரு.

கடிபிடித்தது ழாய்முடித்தீர்த்தன்றன் காமர்மிக்ககமலமலர்த்துணே, யடிபிடித்ததொண் டர்க்குவப்பாம்பணி யாற்றுவாடன் னகத்தினத்தாமலே, படிபிடித்தவர்க் கெய்தருமப்பெரும் பாக்கியத்தைப் பரிவுடனன்ன

வண், மடிபிடித்தளிப் பானெனிற்பத்தர்தம் மான்மியஞ் சொல் வரம்பினதேகொலாம். (அக)

உடலைப்புரக்கும் விதநத்தியற்ப வுயிர்கட்கடைக்கல முற, றிடபத்திசித்த மிசையற்றவற்பர் செயலச்சுதற்ச ரணமாய்த், தொடலுற்றவெச்சி லிலையொக்கவிப்பொய் தொடர்சட்டகத்தை விடிலோ, நடலைப்பெருக்கில் கதி பெற்றுலப்பி னலமுற்றிருக்க வருமே. (அஉ)

## செயதேவ கதி, அரு.

சாதுசங்கத்திற் சிறந்ததாம்பேறென்றித் தரணிவிண் மிசையில்லை, மீதுவேடமிட் டணைந்துளார்களுமன்றே மேலவர்விழிமுன்மேய்க், கோதுதீரியற் பரமபாகவதராக் குறித்தவோர்தகைதன்னுற், றீதுதீர்கதி பெற்றனரெனி லன்பர் சேர்கதிசொலற்பாற்றே. (அங)

## ஷ ககஉ, ககங.

தரணிவாழுயிர்யா வையுஞ்செகநாதன் றன்பதத் தன்புபெற் றுய்வான், விரவுகாருணியம் பத்திவைராகம் விளங்குமெஞ்ஞானமுந் துலக்கும், வரவியாசர்கலை பெறுஞ்செயதேவர் மனையுடன்மாலருள் வனசப், புரண வானிடைசேர்ந் தனர்தமதருட்சீர் புலங்கொள்வார்களு நலம்பெறவே. (அச)

சுட்டிடச்சுடரும் பொன்னிலெந்தவிதத் துயரமெய்தி னுந்துளங் காதே, தொட்டொருமூர்த்தி யைத்தியானித் துச் சுகமுற்றுவீட்டிற்றேய் குதிரென், றிட்டுரைமறைச் சொற் கிசைந்துபாசனைசெய் திடுதவம்பெற்றவர்க் கெல்

லாஞ், சட்டமெய்ச்செயதே வரின்பெருஞ்சரிதஞ் சாட்சி யாமிலக்கிய மாதோ. (அரு)

சீதரசாமி கதி, சச.

வயங்குதம்விழி கொடுதெரிசித்த வண்ணமேமனத் தெண்ணுபுதியான, மியங்கவாற்றிமெய்ப் பத்தர்களாரு ரீனமார்கொடுந் தேனர்களேனு, மயங்கும்வன்கலி யிற் கணபத்தி மருவிற்பேறுறன் மறுக்கொணுநிசமாற், பயங் குலாவுமித் திறத்தின்மானிடர்க்குப் பத்தியிற்சுகம் பயப்ப தொன்றிலையே. (அசு)

வில்வமங்கலகதி, கூ௦.

பாசமகன்றிடிலுயிர்க்குப் பதியிடமென்றோதிடுநூற் பண்புபோல, நீசமலிதருபரத்தை யானசிந்தாமணியுலகை நீத்துக்கண்ண, னேசவருட்டிருநாமந் துதித்தவன்பொற் சரண்சரணு நிலைமைதன்னுன், மாசகன்மெய்க்கதியடை ந்தா ளாதலிற்பத்திக்கிணையா மற்றொன்றின்றே. (அஎ)

விட்டுணுசர்ம கதி, உசு.

கடனிகர்கருணைப் பத்தவற்சலன்றான் கழறியபடி செய்து களத்தி, லிடமகிழ்ந்தனன்யா னித்தினமெய்யென் றிசைத்தலின்யாவரு மகிழ்ந்தே, படலைமற்றதனை மாலுள முவக்கும் படியநவரதமு மணிந்தார், வடமிசைத்துயில் வோன் பத்தர்மேற்கொண்ட வாற்சலியத்தையா ரளப் பார். (அஅ)

திரிலோசன கதி, உ௦.

வெம்மதக்கொடும் பிணக்குளார்யாவரும் விரும்பி யேத் திடுமேர்சால், செம்மலர்த்திரு மகட்குமாருயி

ரெலாஞ் சிறந்ததந் தாயென்றுட், சம்மதங்கொடு சாற்று பூமகட்குமோர் தலைவனு யழைத்திட்ட, கைம்மலைத்துயர் களைந்தவனன்புளங் கலந்தவர்க் கிடருண்டோ. (அகூ)

குலசேகர கதி, கச, உஎ.

எண்ணில்கால மாதவமாற்று மியல்போருந்தங்கள்
கண்ணிற்காணச் சாத்தியமெய்தாக் கடவுட்டனிச்சேவை
மண்ணிற்றிகழ்வோர் போற்றிடுமன்னு வாழ்நீதெரிசித்த
தெண்ணிற்பத்திமான்மியமிதனையென்சொல்குவனென்று.

இராகவன்முன்வனத் தெய்தினு னென்றிடக்கேட்ட லூந் தன்னுயிர், விராவிடவானிடை விட்டவன் மெய்த் தசரதனிலை மேவினன், பராவியனெஞ்சொரு மாத்திரை பற்றினனித்தகை மேவிடி, விராவுநன்பகலுமி ராமன்று ளெண்ணுநர்மாட்சியி சைப்பதோ. (கூக)

இரதீமதிகதி, கூ.

பாலகோவிந்தன் மீதளவின்றிய பத்தியெய்தலிற் பாக்கியமெய்தினுய், மாலருட்பிர சாதம்பூசோபக ரணங் களோடுயர் மந்திரங்கொண்டல, சாலவுண்ணிறை பத்தி கொண்டேயவன் சர்வாபீட்டங் களையுஞ்சாதிக்குநீ, பால கன்றனைப் போலுபசாரங்கள் பண்ணிலைதருள் பாலிப்பன் மெய்ம்மையால். (கூஉ)

கன்னிகாத்துவயகதி, சஎ, சகூ.

சில்லுபில்லு வென்னவாசி யங்கொடுற்ற தேசிகன்
சொல்லுமந்தி ரத்திேனடு துணிபடுத்தி யீந்திடுங்
கல்லுமன்பு ளார்கண்முன்பு காட்சிதந்த தோர்நரே
வில்லுலாவு பத்திமான்மி யத்தையோரும் விரகரே. (கூங)

ஆணெனப்பி றந்துதெய்வ மானதோன் றெனக்கொளன்
மாணெனத்தெ ருண்டிடாது வாதியற்று வார்பவம்
வீணெனத்தெ ளிந்துபத்தி மேன்மையெய்து மாறுகா
தூணெனத்தி கழ்ந்தகாதை யுலகுளோர்க்கு ணர்த்துமே.

கருமாபாய், உகூ, ௩௦.

ஆயபான்மைகண் டவரெலாமளவிலின் பமைந்துகர் மாநாம, தேயமுற்றபார்ப் பனிபத்தியுடனரி திருவருட் பெருக்கத்தை, நேயமெத்துபு துதித்தின்றுமவள்புரி நிவே தனம் புரிகின்றார், தூயவன்னபத் தியினலமுலகெலாந் துலங்கிடும் படிமாதோ. (கூரு)

அநித்தியம்படு பொருள்கண்மேற்காதல்வைத் தரைக் கணச்சுகமின்றி, மனித்தராப்பிறந் திட்டுளோர்களிற்பலர் மாயையிற்பிணிப்பெய்திச், செனித்திறப்படை கின்றனர் மாதவன் செழும்பதத்துளமூன்றி, னினித்தமெய்ச்சுக மும்புகழும்பதிந் தென்றும்வாழ்ந்திடலாமால். (கூசு)

சாத்வீகராசகதி, உ௦, உஉ.

கோதுதோய்தொழில்பற் பலவுளுந்தலைமை கொண் டனைவருமிக வெறுக்குஞ், சூதுமெய்ப்பத்திச் சாத்துவிகற் குத் தொடுகடற்பாரொடு விண்ண, மீதுவாழ்பவரும் புகழ்ந்திடுநலத்தை வியனுறவளித்திட்ட தென்று, லேது சாற்றிடுதல் பத்தியின்பெருமை யிசைப்பரிதென்பதை யொழிந்தே. (கூஎ)

விதிநிடேதமென வேதமாகமங்கள் விளம்பிடலாமிரு வினைவெண், மதியினையறவே கெடுத்திடுமருணன் மானு மிப்பத்தியாற் பல்லோ, ரதிநலமடைதற் கண்டுமற்றதை

விட் டயனெறிப்பட்டுழல் வார்தம், மதியினைக் * குருவின் மதியென்பதல்லான் மற்றெதற்கிணையெனன் மாதோ. ()

பாஞ்சாலராசகதி, உஉ.

வினைவடிவாமுடனுனெ ஞணவமேகூற்றமென்றும் வேட்கைமிஞ்ச, மனைவிமகார்மீதுவைத்த லேமாயாபாச மென்று மற்றோர்க்காக, வினையுறுகன்மத்துழல்வ தேநிரய மென்றுமிதை யிகந்துமாயோ, னனைமலர்த்தாளன்பர் பணி புரிவார்க்கேவைகுந்த நணியதாமால். (சுகூ)

சோன்னகாரகதி, உச.

நகமேவுபுசெய் தவமல்ல நன்றுமொழுக்க மகமல்ல, விகலார்நாத்தி கன்பணிசெய் திருந்தார்க்கரிந்த தலை பொருத்தல், சுகமேவியவான் பணிமுடித்தச் சுதன்று ளடையச் செய்தலன்றோ, ரகமேவியமெய்ப் பத்தியெனி லாரேயதன்பாண் மறைவாரே. (கoo)

அன்ன வியாதகதி, உரு, உசு, உஎ,

விகங்கவர்க்கவெகி னங்களுக்கும்வன வேடனுக்கு மறை யாயிர, முகங்களிற்றுதிசெய் திட்டுமெட்டருமு குந்தநாயகனன் முண்டகச், சுகங்கலந்தவடி யிற்புகுத்து மிய ரேய்ந்தபத்தியிதை விட்டய, மகங்களாதியபு ரிந்து பின்விருக வடிவமாவர்சில மந்தரே. (கoக)

கற்றுளார்களதை யற்றுளார்களொடு கான்விலங்கு புளை னப்புகன், மற்றுளாருயிர்க ளுக்குமாதுருவை மானு மொப்பிலுயர் பத்தியைப், பெற்றுளார்களும ணர்களுக்

---

* குரு-அமாவாசைத் தினம்.

கடிமை பெற்றுளார்களு நலம்பெறச், சற்றுமோவறவ
ஞேர்களுக்குறுகை தாங்கும்யானெனரி மொழியிஞல். ()

அரிதனின்பவுரு வைக்கண்த்தினடி யார்பெறச்செய்
தவர் கட்குமிக், குரிமைமேயவுட லாதியன்னவனு வந்து
தாங்கும்வண் முற்றிடும், பெரியபத்தியினு மிக்கதொன்
றிலெமெய் பேசிலென் றுணரு மேன்மைதான், முரிவினற்
றவமு றும்பவர்தொறுமு யன்றுளார்பெறுவ தாகுமே. ()

வைசியபத்தி கதி ருடு, உசு.

பாந்தண்மேலரி துயிலும்வைகுந்தமெப் பாலதென்
கிலிர்நெஞ்ச, மோய்ந்தவவ்விட மேயிருவினைவடி வுற்றகற்
பனையோவிச் சாந்தமிக்கமைந் துறிலரிதனதுமெய்த் தரி
சனம் பெறலாகு, மாந்தர்காள்பத்தி விட்டவத்தினிலுடல்
வருத்துதல் வன்பாமால். (கoச)

மருவுஞாலமேன் மலரினுக்கேற்றவா மணந்திகழ்ந்
திடுநீர்போ, லொருவிடாதவ ரவர்தவம்பவமற மொத்திட
வுணர்வீந்து, பெருமைசாலரி யபேதம்பேதம்பேதா பேத
மாயியைந்துள்ளா, னருமைமெய்யுணர் வார்க்குவையத்
தினு மவனிலேயணித்தாமே. (கoடு)

காமத்துவசகதி, உஉ.

இன்னவாகா மத்துவச னியற்பத்தியில்வ சீகரணுத்
தன்னதருண்மெய்ப் பதமுமுடற் சமக்காரமுஞ்செய் வித்
துலகின், மன்னத்தனது வாற்சலியம் வயங்கவிளக்கி ஞனி
தனு, துன்னன்புடையார் தமக்கொர்குறை யுண்டோ
வின்ப மல்லாதே. (கoசு)

ஜயமல்ல கதி, ௩௦.

கிருட்டிணன் பொருள்கடம்மைக் கிளரவன் றன தென்மெய்ச்சொற், றெருட்டிகழ் தரவிண்டன்பர் சிற்சுக முறற்கண்டானு, முருட்டியன் மாயைக்கோட்பட் டுழல்வ ரென் றனதென்பொய்கொண், டிருட்டிய னரகத்தெய் தற் கெண்ணுவார் மதியென்னுமே. (கoஎ)

கிருட்டிணபத்தகதி, கஅ.

அந்தியத்தினிற் கற்பினிற்பத்தியி லறிவினிற்சிறந் தோங்குஞ், செந்திருப்புரை மனையுடன்கிருட்டிணன் றிரு வடியினிற்றேய்ந்தா, னிந்தியங்கொடு காண்டருகனவைநே ரிகமயக்கொழித்தேமா, லுந்தியற்பதத் தன்பமைவார்க் கரி தொன் றுளதெனலாமோ. (கoஅ)

அரிபால கதி, ௩ச.

மரிதராதுயர்கிட் கிஞ்சனற்குப்பொன் வழங்கவை சியனெனவாடற், புரிதலினுயிரொத் தியனுருப் பிணியைப் பொற்கைமோ திரநல்கேலென்றிட், டுரிமைமிக்கன்னேன் விரலொடுங்கொளக்கண் டொப்பில்பே ரார்வமெய்தியதே, பிரியபத்தர்கள்பான் மால்கொள்வாற்சலியப் பெருமை நன் குணர்த்திடுமாதோ. (கoகூ)

சாட்சிகோபால கதி, ௩அ.

புண்டரீகனுக் காகமால்பண்டரி புரத்தின்மே வியதே போல், வண்டழைத்தவன் னியின்மணப்பொருட்டவன் மனங்கொள்பத்தி மைதன்னுற், றெண்டரியாவரு மேத்தி டுமாறரித் துவாரத்தின் மிசையுற்றான், கண்டழைத்தவ ரியாருந்தன்பத்தவாற் சலியங்கா ணுறவம்மா. (ககo)

## இராமதாசகதி, ௨௫.

விரித்தியம்புவ தென்னகப்பத்தியில் வினையருக்கிது சான்மோ, வுரித்துறுந்துவ ரையையுருப்பிணிதனை யுபேட்சித்துக்கண்ணன்றான், றரித்திரப்பிரா மணன்மனையின் புடை சார்ந்தமைந்தனனென்றாற், றரித்தமானிடர் கொள் வதிஃதொன்றலாற் சாற்றின்மற்றெதுமன்றே. (௧௧௧)

## கபீர்தாசகதி, ௧௬௯:

ஆனபான்மையி னுற்பத்தவற்சல னுகுமெம்பெரு மானவசஞ்செய, மேனலம்பெறு பத்தியையொப்பதா மிக்கவோர்வழி வேறிலைபத்தர்தம், பானயந்தவொர் வாற்சலியங்கொடு பரந்தபேரரு ளார்பகவற்செயற், கானதன்றெனுங் காரியஞ்செய்தலி னன்பலானரர்க் காந்துணையாவதே. (௧௧௨)

## முராரிபத்த கதி, ௨௨.

சோர்ந்துளாரென வெடுத்தனர்வைகுந்தந் தோய்ந்ததாற்பிறிவுன்னிச், சார்ந்ததுக்கமோ டற்புதமருவினர் தமக்கியன்றனசெய்தா, ரார்ந்தபத்தியின் மான்மியமிற்றென வறைந்திடவெவர்வல்லார், தேர்ந்திடிற்புனி தர்க்கு மெய்ப்பத்தியிற் சிறந்தவான்றுணையாதே. (௧௧௩)

## சூரநாதகதி, ௨௭, ௨௯.

பைம்முகி லனையகோலப் பகவனம் புயத்தாள்வாய்ந்த
தம்முளப் பத்தியென்னுஞ் சலதியை வாக்கால்வாரிச்
செம்முயிர்த் திரளாம்பைங்கூழ் செழித்திடப்பெய்கின்றார்
கட், கம்முத னல்கிடாப்பே றகிலமீ துளதுகொல்லோ. ()

அருவமெய்ப் பத்திதன்னை யாக்கையோ டரிபொற்றாளின்
மருவிடக் கொடுசெல்வார்கண் மாண்பரத் தகையராகும்,

பருகிடப் பாக்களாக்கிப் பாரின்மேல் வைத்துச்செல்வார்
திருவருட் சத்திமேவித் திகழ்குரு வனையாரம்மா. (௧௧௫)

பிம்பாசிபத்த கதி, ௬௭.

ஆதலான்மெய்த் திருவருட்சத்தி யமையுமந்தப் புரத்திடைமேவிக், காதலானபல் சித்தியுமின்பக் கலப்புமெய்திடக் காதல்கொண்மேலோர்க், கோதலானமெய்ப் பத்தியையல்லா லுற்றநற்றுணை மற்றிலையென்னும், போதமேவிய மாதவர்சொற்குப் புகன்றகாதை பொருந்தியற்சான்ற. (௧௧௬)

வேசியாபத்தி கதி, ௬௯.

ஆதலாலுயர் கதிபெறற்கெளிய தானமார்க்கந்தனகங்கொள்பத்தியல்லா, தோதவேறிலை சாதியின்பிரட்டரோங்கு பாவிகளூறுமைம்பாதகரு, மாதரங்கொடு சீதரன்பொற்று ளரைக்கணப்பொழு தகத்தமைத்தனரேற், பூதலத்தருந் தேவரும்புகழப் புனிதநற்கதி பொருந்துவர்மெய்யே. (௧௧௭)

இரவிதாச கதி, ௭௩.

தறையினர்தவமாத் திகழ்தருமிரவி தாசர்பன்னுள் வதிந்தனித்தத், துறையிடைமேயோர் பலருமெய்ப்பத்தித் துறைபுகத்திருத்தியீற்றினின்மா, னறையருட்பதத்தொன் றினரிதாற்பகவ னல்லருள்சாதிவித்தைகள்பொன், னிறைவுகொடெய்தா தொப்பில்பத்தியினு னேருமென்றேறு தனிச்சயமே. (௧௧௮)

நரகரிபத்தகதி, ௨௯.

மண்ணைத்திரள்களு நண்ணப்பயமுறு மண்ணைத்துயர்மிக வேநல்கும், பெண்ணைச்சதமறு பொன்னைக்கருதுப

பின்னப்படுமன மிசையன்பர், கண்ணேக்கவர்தரும் வண்ணத்துருவுள கண்ணற்கருதிநன் மறையோதில், விண்ணேத் தருமிது கண்ணற்றதிதுயர் விம்முற்றுழனரர் வினே யென்னே. (கககூ)

## தத்துவாசிசிவாசி கதி, உரு.

குரவனேதிடுஞ்சொன் மறைமுடியென்னக் கொண்டோர் மூர்த்தியையுபாசிக்குஞ், சரதருக்குலக ரிகழிடர் பலவாச் சாரினுந்தாம் பொறுத்துளவோர், விரதம்விடா தாற் றிடிலிகபரச்சீர் மேவிவாழ்குவரெனுமொழிக்குக், கரவறுதத்து வாசிசிவாசி கதியொருசாட்சியாமாதோ. ()

## மாதவதாச கதி, ருரு, கூக.

கோபதாபங்களுக்கே தன்னெஞ்சைப்பறிகொடுத்துக் கும்பிதோயும், பாபவுருவானவளு மெய்த்தொண்டர்த்தெரிசித்த பண்பினலும், தீபமவரிடுந்திறத்தினுலுமிற்ரும்பெருவாழ்வு சேர்ந்தாளாகின், மாபயன்சால்பத்தரைப்பூசித்து விளக்கிடுவார்சீர் வரம்பிற்றேயோ. (கஉக)

இவ்வணம்பத்தி கொண்டுமாதவர்தா மிமையவர் வியக்குமெண்ணரிய, செவ்வகையாடல் புரிந்துவைகுந்தஞ் சேர்ந்தனர் செய்கைமற்றதனு, லொவ்வருபுருடார்த் தப்பெரும்பலங்க ளூதவிடுதருவுறழ்பத்தி, யெவ்வகைகொண்டு மெய்திடலன்னேர்க் கெய்திடற்கரியதின்றின்றே. (கஉஉ)

## இரகுநாத கதி, கக.

இத்திறத்தாற் பத்தியுடன் பகவனேயாராதனேமிக்கியற்றுவார்க்குச், சித்தியுருதிலேயுயர் தெய்வமன்பர்க்குப்பிரசா திக்கும்பான்மை, மெத்தியவித்தங்கொடன்றே காக்கிரசித்தப்பத்தி வினேவென்றேர்வீ, ரொத்தியன்மா

வுடன்விகங்க வினங்களூமோர்சான்றிதனுக் கோரின்
மாதோ. (கஉங)

கிருட்டிணசைதன்யபிரபு கதி, உசு.

இன்னவருட் பேறவருக் கீந்ததுல கெவையு
மிறைவடிவா நோக்குபத்தி யன்றியில்லை யில்லை
மன்னருட்கிட் டிணசைதன் யப்பிரபு தன்னோர்
மரபினரிக் காலத்து மருவினர்கெள டத்தே. (கஉச)

சூரதாச கதி, ஙஎ.

ஆதலிற்புறச்சார் பொன்றினைநாடா தவரவரகத்தலர் மணம்போற், போதருமுண்மைப் பத்தியேசித்தி புத்தி முத்திகளெலாங்கொடுக்கு, மேதகையுடைய தஃதிலார் மனித மேனியின்மேவினுங்கான, மீதமைவிலங்கு புட்களிற்கடையா மிக்கவர்ப்பழித்தழிதிறத்தால். (கஉரு)

அரிவியாச கதி, ககூ, உங.

அன்றுதொட்டவண் மேவியமானிட ராரும்வாமசாத்தேயமறுத்தரிக், கொன்றுமன்பின ராய்ப்பத்தனேதுபதேசமெய்தின ருத்தமராயினர், பொன்றுறும்பிணப் பூசைகொள்பேய்த்தகை போக்கும்பத்திர காளிபுகழ்நலங், துன்றுதெய்வத் தகைமருவுற்றன டீயபத்தர் தொடர்ச்சிகொணன்மையால். (கஉசு)

ஒப்பகன்ற பரப்பிரமத்தினுக் குற்றசத்திப்பண் பாம்பலமார்க்கத்துட், பொய்ப்பமைந்த புறப்பொருட்பாலுறப் புணர்த்துமார்க்கம் புகுமவரியாவரு, மெய்ப்பமைந்த விபசாரமங்கைய ரேய்க்குவார்க ளியலுடலாதியுங், கைப்புகன்றவின் பந்தருபத்தியாற் கடவுட்டோய்குநர் கற்பினர்போல்வரே. (கஉஎ)

### விட்டலதாச கதி, கஎ, உஎ.

இலக்குமியையுரத்திலிருத் தியதிருமாலினைத்தமுளத் திருத்தினோரா, நலக்குறிதோய்பத்தர்தமக் கிகபரத்தி லோர்குறைதா னண்ணுங்கொல்லோ, புலக்குறிதோயல கையுல கினைமதியாத்தாசனின்பம்பொங்கியாவுந், துலக்கு கதிரவனனைய ஞானமுமெய்ப் புகழ்ச்சிறப்புந் துதைந்து வாழ்ந்தான். (கஉஅ)

கண்ணபிரான்றிருவடிப்பொற் பிணைபற்றிச்சமுசாரக் கடலைநீந்தி, நண்ணருமுத்தர்களானு ரிணையறுவிட்டல தாச னரர்தம்வாழ்வா, மண்ணகத்தில் வாழ்ந்தீற்றில் வைகுந்தமருவினனிவ் வாய்மைதன்னாற், புண்ணமை யாகங்கொளுயிர்க் குற்றதுணைபத்தியலாற் புகலிலின்றே.

### உரூபசனாதன கதி, ௩க.

இத்திறம்பட ரூபசனாதனற் கினியமால்வசனாகிச், சித்தியற்புதம் பலபடப்புரிவித்துச் செனித்திறப்பறு மேலா, முத்தியும்பெறச் செய்தனனாதலின் மூவுலகப் பாலும், புத்திமிக்கவர் கோடல்பத்திமையலாற் பொருள் பிறிதொன்றுண்டோ. (கநo)

### அரிதாச கதி, உகூ, ௩o.

கணம்பொருந்துகூட் டுறவினான்மதம்பொழி கடகரி தனைக்கண்ணன், மணம்பொருந்துவான் கதிபெறவைத் திடு மலியருட்குருபத்திக், குணம்பொருந்தரி தாசன்மற் றோர்தனுக் கொண்டிடற்கமையாதாம், விணம்பொருந் திடுஞ் செயற்கொருபாவிநன் விளம்பிடன்மிகையாமால்.

மதம்பொழிந்திடும் யானையுஞ்சற்குரு மந்திரஞ்செவி யேற்றே, யிதம்பொருந்துமெய்ப் பத்தர்தம்பணிசெய்திட்

டிறைபதமுறக்கண்டுஞ், சதம்பொருந்துநற் றுணைமனை
சுதரெனச் சகத்துழன்றுழிமாக்கள், கதம்பொருந்துவல்
விலங்கென்பேமல்லது கழறவொன்றமையாதே. (கஙௗஉ)

## சதனபத்தி கதி, ௲உ.

பத்திமான்மிய மென்மிலேச்சக்குலப் பாலனுஞ்சத
னற்கு, நத்தியோகியர்க் கெய்தரும்பெரும்பத நல்கியதி
தனுலே, நத்தியைந்தகை மாற்குளப்பிரீதியை நல்கிடச்
செயலுள்ளச், சுத்தியல்லதீண் டியர்குலத்துதித்திடு தூல
சுத்தியன்றன்றே. (கஙங)

## சோசீபத்தி கதி, உ0.

பின்னியல்கருணைக் கடலுறழ்மாயன் பெய்கழலிடை
கலந்தமைந்தான், றன்னியற்குரவன் சகுணநாட்டத்தைத்
தணந்துகாற்றினைப்பிடித்ததனுன், மன்னியற்சீட னுருவி
னுலொப்பில் வான்கதிபெறவந்ததிதனுற், கொன்னிய
லாசான் றனைத்தெய்வமொன்றைக் கொள்ளுதலறிவு
ளோர்குணமே. (கஙச)

## சூத்திரதம்பதி கதி, உசு.

மருவியபேய்விட் டிடிற்குலதெய்வம் வருமெனுமா
நிலமொழிபோற், கருவுடன்மானம் விடினுடனுண்மைக்
காட்சியுட்டோன்று மாமாயைப், பருவரலார்மூ வேடணை
யகலிற் பத்திவாய்ந்திடுமெனும்வழக்குக், கிருளறுதவச்
சூத் திரதம்பதிகட மியற்கதை சாட்சியாமம்மா. (கஉரு)

## கோவிந்தசாமி கதி, உஉ.

பருவமொத்திடப் பத்தியுஞானமும் பல்கியெளவன
மெய்திக், கிருகத்தாச்சிர மத்தினின்றியாவையுங் கிருட்டி
ணார்ப்பணமாக்கி, யிருவிதப்பெரும் போகமுமிகத்திடை

யேய்ந்தரிபதஞ்சேர்ந்தான், றிருவருட்கட லானமாலன்
பர்க்குச் சித்தியாப்பொருளுண்டோ. (கஙசு)

## குஞ்ஞாமாலி கதி, உo.

பத்தியினிவேத னம்புரிந்தயில்வார் பயிலுமிவ்வகை
தமாயுளின்மட், டொத்தியல்கண்ண னுவப்புறப்பணிக
ளுஞற்றிவாழ்ந்திற்றில்வைகுந்த, மெய்த்திருநாடெய் தினரி
தாலியானே மேவிடுமிடமெலாம்வழியென், றுத்திசால்பெரி
யோ ரோதல்போற்பத்த ருன்னல்யாவையுங்கதிவழியே.

## நரசிம்மபத்தகதி, ககங, ககச, ககரு.

ஆதலினரரா யினர்பெறும்பேறன் பல்லதொன்றிலே
யிதுசரத, மேதகுபகவன் கீதையிலனேத்தும் விட்டநங்கிய
சரணர்களாய்ப், போதமாரெனது சொருபராயெவரெற்
பூசைசெய்யன்பர்களவர்போற், பேதமிலிலக்குமியுமெனக்
குற்ற பிரியையன்றீதலாலெனேயும். (கஙஅ)

மறந்தனேர்வயப்பட் டிடுகின்றேனென்னின் மற்றினி
யுரைப்பதென்னென்னச், சிறந்தமெய்ப்பத்த வாற்சலியத்
தாற் செப்பியுள்ளானிது திறத்தா, லறந்தவாத்தொண்டர்க்
கோர்தருவாகி யவிர்ந்திடுபகவன்மெய்யன்பே, பிறந்தமா
னிடர்கொள் பேறெனவசலம் பிறங்கொளிபோல்விளங்
கிடுமே. (கஙகூ)

நலமலிமுனிவ ரினங்களுமலரி னறுமணம்போற்கனி
யிடத்திற், குலவியசுவைபோ லுற்றமெய்ப்பத்தி கூடிலி
தேற்கன்மஞானத், திலகிடுபயனின் றெனவிதந்திடலா
லியாருமன்னேயிற்சிறந்தவிரும், பலமுறுநடுநா யகமதா
மொப்பில் பத்தியைக்கோடலேசால்பாம். (கசo)

சதுர்ப்புச கதி, ௨௨, ௨௩, ௨௪.

கொள்ளையன்புசால் சதுர்ப்புசமன்னவன் கூட்டரவத ஞலே, கிள்ளையின்குலம் பத்திஞானங்கொடு கிளர்தல் கேட்பினுமாயைச், சள்ளையாருல கத்திடையொழிதலில் சத்தியமதிவைத்துப், பிள்ளைபெண்டுகட் பேணிநீநானெ னும் பித்தர்களுணர்வென்னே. (கசக)

பஞ்சரத்துள்வாழ் கிளிகளுமுலகெலாம் பகவன்மெய் வடிவென்ன, நெஞ்சகத்துனும் பேறுபெற்றனவெனி னிகழ்சதுர்ப்புயமன்னன், றஞ்சமாநரர் தாம்புவிமீதினிற் றயங்குவாரோமாயன், கஞ்சநேர்பதப் பஞ்சரத்திடைசுகங் கலந்தவராமன்றே. (கச௨)

இன்னபேறுயர் பத்தர்தஞ்சிரவணத் தெய்துமேலன் ஞோர்தம், மன்னருட்பெருஞ் சேவைசெய்பவர்க்குறு மாட் சியொன்றுளதாமோ, புன்னலாந்தகை யானரராம்பவம் பற்றிஞோர்செயத்தக்க, நன்னலப்பத்த ருறவுடனவர்திற நவிலலல்லாலியாதே. (கச௩)

மீராபாயி கதி, ௨௨, ௩௧.

மலிபரவசத்த னெழுந்துபோந்தொல்லை வாங்கியா னந்தமிக்குண்டா, னொலிதருகழற்றுட் கிரிதரனருளா லொருசிறிதேனுமெய்மனத்தின், மெலிவடைந்திலஃ தான்றதுமுதலா மிக்கதெய்விகவருட்டேசும், பொலிதரலா ளுள் பத்தர்பால்விடமும் புகல்பரிசுத்தமாமன்றோ. (கச௪)

பரிசனம்புரிந்து விடத்தையுமமுதப் பான்மையில யின்றருளம்மை, தரிசனம்புரிந்த தன்மையர்ற்றார்த்தன் றூனுந்தன்னகத்திடையெழுந்த, வரிசடுவர்க்க முழுதுமற்

றன்ப ஞகினனெனிற்பத்தரேவல், விரியுமெய்யன்பிற் புரி தருமன்பர் மேவுசீர்விளம்பிடுந்தகைத்தோ. (கசரு)

ஷை சச, சரு.

விசனமும்வியப்பு மருவியம்மையின்பொன் மேனியை யெடுத்தனரகன்றே, நிசமறைமுறையி லியல்சமக்கார நிய தியாற்றினருவந்தமைந்தார், பிசகில்சீர்மீரா பாயிபெண் சென்மம் பெற்றுமெய்ப்பத்தியின்பெருக்கால், வசமன யோகர் தமக்குமெய்தரிதா மாண்பதம்பெற்றனண் மன்னே. (கசசா)

ஆனபான்மையினெய் தருநரசென்ம மமைந்துளோர் யாவரும்பொய்யாங், கானனீர்விரும்பி யுழன்றிடுமானிற் கனவனவுலகபோகத்தின், மானமற்றவத்தி லலைந்தொழி யாதே வாஞ்சைமுற்றுதவருட்கண்ணன், ஞானவானந்த விணையடிப்பத்தி நண்ணியின்பெய்திடனலமே. (கசஎ)

சசூசியாம கதி. கச, கரு, கசா.

ஒப்பினன்மருந் துவந்துகொளுவர்த்துக்கொ ளுண் டிடுமவர்கட்குத், தப்பிடாதுதன் பயன்றருஞ்செய்கை போற் றவம்பொலிபெரியோர்தம், வைப்பியைந்தவர் துட் டர்களாயினு மறுவில்கூட்டுறவாலே, பப்பவிச்சைநா சினி யெனச்சாற்றருட் பத்தியெய்திடுமன்றே. (கசஅ)

ஆதலானுயிர்க் குத்துணைபகவன தருளதையடைதற் குப், போதரும்பன்மார்க் கத்தினுட்பத்தியே பொருந்து சாதனமென்று, மேதகைப்பத்தி பெறுதல்சாதுக்கள் பான் மேவலாலவர்சில, மோதலாலெளி தெய்துறு மென்கைமெய் யுணர்வுளோர்துணிவாமால். (கசகூ)

அரியமானுடப் பிறவியாற்பெறும்பய னரியருட்பெரும்பூசை, புரிதலன்பர்தம் பணிசெய்தலேயது புரிதராதிகமீதி, லுரிமைமிக்குடற் புரந்துவாழ்கலனெனு முரச்சஞசியாமன்றுன், றிரிவிதக்கர ணத்தினுமியற்றிப்பின் றிருவைகுந்தஞ்சேர்ந்தான். (கருo)

## சகந்நாத கதி, கக.

அத்திசெந் நீர்நரம்பா லாமநித் தியவுடற்கண்
வைத்திடு மாசைதன்னை வரம்பில்பே ரின்பநல்கு
நத்தியல் கரத்தெம்மான்ரு ளுண்மலர்ப் பதத்தமைத்தல்
பத்தியா மதனுலெய்தப் படாததொன் றின்றின்றின்றே.

## இராசபக்தி கதி, உஉ, உ௩.

பொன்னைவேட்டுமெய்ப் பத்தர்போல்வேடமேற் புனைந்தோர், தன்னைநேரிறை பாலணைந்தவன்சங்கற் பத்தான், பின்னைநேருல காசைவிட்டருணிலை மேவி, லென்னை சாற்றுவன் பத்திமான்மியத்தையா னெடுத்தே.(கருஉ)

ஆதலாலரி தாநரசென்மத்தை யடைந்து
மேதகைப்பெரும் பத்திகொண்டருணிலை மேவா
தேதமாயையிற் சுழல்வரின்கழைரச மிகந்து
கோதயின்றுவாய் நோதலெய்தினர்தங் குருவே. (கரு௩)

## சுகாநந்த கதி, உக.

காணினுட் கருதிற்கேட்கிற் கரையில்பே ரின்பநல்கு
மாணில வருட்கண்ணன்றன் மலர்ப்பதப் பத்திவிட்டு
வீணிய லலகைத்தேராய் மிக்கதுன் பளிக்குமாயைக்
கோணியற் படுபொய்மாக்கள் கோளிலாம் பொறியரம்மா.

சேனுபத்தி கதி, உரு, உச.

சேனனு விதக்குலத்திற் செனித்தவ னெனினும்பத்தி
யானவம் பியினுன்மாயை யார்கலி தன்னைத்தாண்டி
மானமார் யோகியர்க்கு மருவருங் கதிபெற்றிட்டா
ஞனதான் மனிதராஞ ரழிதரு பிரபஞ்சத்தில். (கருரு)

எய்திடற் கரியயாக்கை யேய்ந்திடிற் சாதிமேன்மை
பொய்திகழ்செல்வங்காயம் பொருந்திடு பலத்தையெண்ணி
மைதிக ழகந்தைகொண்டு மாண்டிடா துற்றசீவ
னுய்திபெற் றிடமெய்ப்பத்தி யுறுவது சால்பாமன்றே. ()

நந்ததாச கதி, உ0.

வேதமுதலாங் கலைத்தெருட்சி மேலாநந்த தாசனரி, பாதபத்தி கொண்டொப்பில் பரமபதம்பெற் றனனிதனுற் போதமுறுமா னிடசெனனம் பொருந்தினீர்புன் கல்விகள்கற், றேதமருவா துயர்பத்தி யெய்திச்சுகமிக் கெய்வீரால். (கருஎ)

பிருதுவிராச கதி. கஅ, கக.

பொருவருகடவுளை வழிபடுதொண்டர்கள் போய்முழுகத்தகுமோர், திருமலிதீர்த்தம மைந்தவிடத்திடை தேடியமைந்ததுவு, மிருவிழியற்றமை வைசியனிம்மெனு முன்னவைபெற்றதுவுங், குருமொழிநம்பிய மைந்தனுல் வரு கொற்றமெனத்தகுமே. (கருஅ)

இத்திறவாடல்கள் பற்பலவாகவி யற்றிடுமன்றனதோர், புத்திரனுக்கர சீந்துவைகுந்தபு ரத்திலணைந்தனனு, லெத்திறமுந்தரு பத்தியின்மாட்சிமை யென்னெனவோதுபுநாந், துத்தியமாற்றிட லல்லதுவாய்கொடு சொற்றுமுடிப்பதுவே. (கருகூ)

## கோகுலநாத கதி, கஅ.

கந்தன்றுன்புலே யுடற்கொண்டும்பத்தியாற் கண்ணன் ருட்டுணேதோய்ந்தா, னிந்தவாற்றிறு லருட்பிரசாதத்துக் கேற்றவாந்தகைவாய்ந்த, தந்தணப்பிறப் பாச்சிரமாதிக ளன்றுயிர்க்கின்பீதல், சொந்தமாருளப் பத்தியேமற்றவை தூலசுத்திகளாமால். (கசுo)

## இரத்திறுவதிகதி, உஅ.

இத்தகையிரத்தி றுவதிபத்தி யிணேயில்லைபவத்திணே யின்று, மத்தலத்தமைந்தார் பலருமெச்சினர்மிக் கறைந் திடுகின்றனருன்ணி, லுத்தமப்பத்தர் தமக்கரிதொன் றுண் டுலகிலென்றுரைத்திடலாமோ, வொத்தவித்திறத் தாற் பத்தியல்லதுமெய் யுணர்வுளார்கோடலொன் றிலேயே. (கசுக)

## கூபதாச கதி, ௩க, ௩உ.

இழிகுலக்கூப தாசனெவ்விடத்தா னிணேயில்யோகி யர்க்கு மிக்கரிதா, மொழிதருபத்தி யெங்ஙனித்தகையான் முயங்குயிர்கட்குற்றதுணே தான், செழியமெய்ப்பத்தி யல் லதுண்டோவித் திறவெளிதாமிதைவிட்டே, யழிவழிக ளின்மா னிடர்களாயினரு மடைந்திறக்கின்றனரந்தோ.()

இகல்படுமாயா வடிவமாய்மனத்தி லெண்ணிடும் பொழுதெலாந்துக்க, மிகவளித்திடுசெல் வஞ்சுதர்மாதர் மிசைநசைவைத்துளமாந்தர், தகவதிற்கோடி தனிலொரு பாகந் தயைநிறைபகவன்மீதமைக்கி, னிகமமிக்கரிதா நுவ னரசென்ம நிட்பலமாயொழியாதால். (கசு௩)

கரமேளதிகதி, உக, உஉ.

அரியமா னிடசென்மத்தை யடைந்தவ ரியாருங்கோ டற், குரியது பத்தியன்ன துற்றிலா ரெவராணலுந், தெரி யிலேற் கெனவேமூக்குச் சிதைந்துளா ரதனலன்றோ, சொரிமல முதற்கொள்யாக்கைத் துர்க்கந்த முணர்ந்தி லாரால். (கசூச)

மூக்கையோ விழந்தாயன்பின் முகுந்தன மஞ்சொல் லாமே, நாக்கையு மிழந்தாய்காண நயனமு மிழந்தாய் பத்தர், போக்கைநீ கொள்ளாப்பண்பாற் பொருந்திய வுயிரோடுற்ற, யாக்கையு மிழந்தாய்வாழ்ந்து மிறந்தனை போலுமந்தோ. (கசூரு)

ஷை ருக.

பெண்ணிய வுருவம்வாய்ந்தும் பிறங்கிசைக் கரமேள திப்பேர்ப், புண்ணியக் கொடிவிரத்தி பொருந்தியே பக வன்றுளா, நண்ணிய கொழுகொம்பேறி நற்கதி பெற் றுளஃதான், மண்ணிய னரர்க்குப்பத்தி மார்க்கத்திற் சிறந்ததின்றே. (கசூசூ)

பிரேமநிதி கதி, உஉ.

அரிதன்றொண்டர்க் கோரிடையூ றுற்றமிலேச்சர் தொழுந்தேவாய்ப், பரிவின்மிலேச்சன் றனைச்சிட்சை பண்ணுந்திறத்தாற் றிருமாலே, விரியுஞ்சமய மெவ்வெவற் றும் விளங்குகின்று னென்பதற்கு, முரிமைப்பத்திக் கிணை யின்றென் றிடற்குங்கதையீதொரு சான்றே. (கசூஎ)

சேகதேவநிர்த்தகி கதி, கரு.

இன்னவகைசெகதேவ மன்னனுநர்த்தகியுமரிக் கினி துபூசை, மன்னகப்பத்தியிற்புரிந்து சித்திபலவுலகறிய

வயக்கியீற்றி, லுன்னதமெய்ப்பேறடைந்தா ராதலின்
மானிடசென்ன முற்ருரியாரு, மென்னமுயன் றும்பத்தி
யெய்திடிலன்னவர்க்கரிதொன் றில்லைமெய்யே. (கசூஅ)

### கோவிந்தடக்கர கதி, உகூ.

சீடனுயினன்மெய்ப் பகவனேதியவா தியா
றினனிருந்தீற்றிற், பீடருட்கண்ணன் பதத்தி
தான் பிறங்குமத்தவரிருவரின்சீர், மாடமார்மிதில
ளாரின் றும் வழுத்திடுகின் றனரிதனுற், கேடறுபத்
தாருயிர்க்குக் கிளர்துணையில்லை சத்தியமே. )

### அந்தர்பத்திராச கதி, கரு.

சீரியற்றிரு வைகுந்தபதத்திடை சேர்ந்தான்
பாரியுந்தனு யகனுடன்பதமது பெற்று
டேரியற்பெறு மாந்தரியாவருங்களி சிறந்தா
ரோரினுள்ளெழு பத்திநேரொருநெறி யுளதோ. ○)

### குருபத்தி கதி, கச.

இவ்வாற்ருன்மா னிடரா யிலங்கும் ாக்
கியத்த, ரெவ்வாற்ருனும் பத்தி யிசையப்பெறி வர்
கட், கொவ்வாப்பேறென் றிலையென் றுணர்ந் ிவி
னேடும், வவ்வாத்திகரா யழியா வாழ்க்கை ன்
னலமே. ாக)

### இராமப்பிரசாத கதி, உ௦.

என்னவோதலிற் கலியுகத்தித்ததி தன்னின்
மன்னருட்கட வுட்டெரிசனமரு வாதென்
றின்னன்மிக்கிரங் கலிர்பத்திபுரியிலெவ் விதத்தும்
பன்னகப்பெரும் பாயலான்பதந்தரும் பாரீர். (களஉ)

துக்காராமசுவாமி கதி, உசு௦.

பகைநட்பாம் புலி சற்பந் துயர்செய்யா விடமுந்தப் பண்பாந்துன்பு, மிகைகொளின்பா மக்கினியுஞ் சீதளமா மனம்புனித மேவுமென்னிற், றகைபெறுசீதரனருளு மெய்துமுமக் கித்தகுநோய் சாரலாமோ, சிகைபெறுமா மறையுணர்வீ ரென்றபங்கமொன்றெழுதிச் செலுத்தக் கண்டான். (கஎங)

ஷ நடுஉ, நடுங, நடுச.

மருள்வயப்பட்டோர் தமக்கருவினைகள் வடிவமாப் போகமீந்தீற்றி, லிருள்வயத்தெய்தப்புரிதல்போனிவிர்த்தி யெய்துமார்க் கப்பரபோகத், தெருள்வயப்பட்டோர் தமக்குமுன்னேருந் தெய்வமுமுருவமாத் தோற்றி, யருள் வயப்படச்செய் திடும்பின்னையுடனே யபின்னையாய்ப் பக் குவமொத்தே. (கஎச)

சத்தியத்தகை தோய்ந் திரக்கமாசாரந் தாங்கிமெய்த் தவம் புரிந்தீடில், சித்திபற்பலவிவ் வுலகிடத்தியற்றித் திரு வருளிடை கலந்தோரைப், பத்தியால் விரும்பி வணங்கு நர்க்கந்தப் படிவமாயுயர் பரந்தானே, நத்திமுற்படுமென் றுயரநுபூதி நலங்கொண்மேலவர் நவில்வாரே. (கஎரு)

காயிரும்பதனு லுணப்படுநீர்போற் கதியிடை கலந்த வர்நீங்கி, மாயிரும்புவியிற் பிறங்கிடார்நிசமே மறுவிலெஞ் சற்குருபரனு, மேயிருபதப்பூ வெமக்கணிந்தருளும் விமல ராமானந்தனருளென், வாயிருந்தசைப்பப் பத்தமான்மிய நூல் வழுத்தியின்புற முடித்தேனே. (கஎசு)

ஷ நடுகூ.

கோலப்பொலிவார் கொங்கிலணி குலவுஞ்சிரவ ணப் பதியிற், குழவியராகிக் கலைபயின்று குமரன்றனைச்செந் திலில்வணங்கிச், சீலப்பழனிக் கிரியருகிற் றிகழ்சற்குரவ னுபதேசஞ், செயப்பெற்றரிய வநுபூதி சேரவடைந்து தவ வேடஞ், சாலத்துலங்கி யடியர்பலர் சகமாலொழிந்து ஞானநிலை, சாரக்கடைக்கண் ணருள்வீசித் தகைதோய் கனக சபைக்கொலுவி, லேலற்புதமார் குருபரவுன் னிணைத்தாளிடைசேர்த் தெனையாள்வா, யிராமானந்தப் பெயர்கொடென திதயத்திலங்கும் பெருமாளே. (௧௭௭)

முற்றிற்று

ஆ பாகம் இரண்டுக்குக் கவி, ௩௧௭.

---

## நூற்பயன்

### வெண்பா

பத்திவிசே டத்திரட்டைப் பற்றியநுட் டித்திடுவோர்
நத்தியபே றெல்லா நணியடைந்து-சத்தியமா
ஞானவழி வீட்டினிடை நண்ணிப் பிறப்பிறப்பா
மீனமற்றென் றுவர்நிசமே.

குருபாதமேகதி.

# விளம்பரம்

பக்த மான்மியம் ... 6 0 0

சங்கராசாரிய வைபவம் ... 1 8 0

இராமானந்தத்திரட்டு ஷை பிரதாபம்
சற்குருசரிதவண்ணக்கோவை ... 2 0 0

சிந்துத்திரட்டு
அலங்காரச் சிந்து, பிரதாபச் சிந்து, அநுபந்தச்சிந்து ... 1 0 0

மருதாசலப் பிரபந்தத்திரட்டு
அலங்காரம், யமகவந்தாதி, சந்தப்பதிகம், வேற்றெய்வமாலை, மயிற்பதிகம், வாழாப்பதிகம், கணபதியூர்விநாயகரந்தாதி, வேணுகோபாலர் சந்தப் பதிகம்.. 0 8 0

பக்தமான்மியசாரம் என்னும்
குருதோத்திரமாலை ... 0 8 0

இரத்தினாசலப் பிரபந்தத் திரட்டு ... 0 6 0

பக்தி விசேடத் திரட்டு ... 0 6 0

வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக் கெழுதி உரிய விலைக்குத் தபால் மூலமாயும், நேரிலும் பெறலாம்.

வி. பி. தபாற்கூலி தனி.

விலாசம்:

ஸ்ரீ கந்தசாமி சுவாமிகள்,
கௌமாரமடாலயம்,
சிரவணபுரம்,
கணபதி போஸ்ட்,
கோயமுத்தூர்.

1931
சென்னை.